# எம்.ஜி.ஆரை கொலை செய்ய சதி!

விலை ரூபா 1-00 ★

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 14 ரவி அவ் 30 இதழ் 345
யாழ்ப்பாணம் புதன்கிழமை 27 1 82

## ஒருவர் கைது

சென்னை, ஜன.26

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனைக் கொலை செய்யச் சதிமுயற்சி மேற்கொள்ளப் பட்ட தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நெய்வேலியில் நேற்றுநடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு இத் தகவலை வெளியிட்டதமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன், தம்மைக் கொலைசெய்யவிருந்த நபர் உடனடியாகவே கைதுசெய்யப்பட்டுக்காவலில் வைக்கப் பட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்,

இக்கொலை முயற்சி எங்கு, எவ்விதம் மேற்கொள்ளப்பட்டது என்ற விபரத்தை தமிழக முதல்வர் உடனடியாக வெளியிடவில்லை,

சிமெந்துத் தொழிற்சாலை 3-ம் கட்டம்:

## கைகலப்பில் பலர் காயம் பாதுகாவலர்கள் இடமாற்றம்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை மூன்றும் கட்ட வேலைத்தளத்தில் நேற்றுமுன் தினமிரவு பாதுகாப்புச்சேவை ஊழியர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே இடம்பெற்ற கைகலப்பில் பலர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை இதுசம்பந்தமாக தொழிற்சாலை மேலிடம் ஒழுங்குநடவடிக்கை மேற்கொண்டதை தொடர்ந்து சம்பந்தப்பட்ட பகுதியில் கடமையாற்றிய பாதுகாப்புச் சேவை ஊழியர்கள் சுமார் 50 பேர் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர் என்றும் இவர்களுக்குப் பதிலாகப் புதியவர்கள் நியமிக்பட்டனர் என்றும் தெரியவருகிறது.

நேற்று முன்தினமிரவு சுமார் எட்டுமணியளவில் பாதுகாப்புச்சேவை ஊழியர்கள், மூன்றும் கட்டவேலைத் தளத்தில் கடமையாற்றிய தொழிலாளர்களைத் தாக்கினர் என்றும், இதனைத்தொடர்ந்து கைகலப்பு மூண்டது என்றும் தெரிவிக்கப்பட்டது,

இரவு சுமார் பதினொரு மணியளவில் திடீரென

(8-ம் பக்கம் பார்க்க)

★ இலங்கை கல்விச்சேவை தரம் மூன்று

# 53 பேர் பதவி உயர்வு:

# தமிழர் 05, முஸ்லிம் 03

## தமிழ்ப் பாடசாலை அதிபர் எவருக்கும் பதவி உயர்வு கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

**இலங்கை கல்விச்சேவை தரம் மூன்றுக்கு 53 பேர் பதவிஉயர்வு பெற்றுள்ளனர்; இப் பதவிஉயர்வுபெற்றவர்களில் தமிழர்கள் ஐந்து பேர் மட்டுமே. முஸ்லிம்கள் மூவர்.**

பதவிஉயர்வு பெற்ற தமிழர்களின் விபரம் வருமாறு:

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செல்வி சிரோன்மணி இராஜரத்தினம், மட்டக் களப்புக் கல்வி அதிகாரி திரு. கிருபைராஜா, மட்டக்களப்புப் பதில் பிரதம கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. ஜே. சற்குணராஜா, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. சுந்தரலிங்கம், திரு. வல்லிபுரம் ஆகியோர்.

முஸ்லிம்கள் விபரம்: யாழ். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த பதில் பிரதம கல்வி அதிகாரி ஜனுப் மன்சூர், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த ஜனுப் மஜீத், கம்பளை சாகிரா கல்லூரி அதிபர் ஜனுப் கபூர்.

பதவி உயர்வுபெற்ற 53 பேரில் 10 சிங்களப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களுக்குப் பிரதம கல்வி அதிகாரி பதவிவழங்கப்பட்ட போதிலும் தமிழ்ப்பாடசாலை அதிபர்களில் ஒருவராவது இத் தரத்துக்குப் பதவி உயர்வு வழங்கப்படாமைகுறித்து, இ. த. ஆ. சங்கப் பொதுச்செயலாளர் கல்விச்சேவை ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரவுள்ளார். (அ)

## இடமாற்றம் பெற்றும் புதிய இடங்களுக்குச் செல்லாத ஆசிரியர்கள் பதவியிழப்பர்

(கரவெட்டி)

உள்ளூர் இடமாற்றம் பெற்று இதுவரை காலமும் தமது புதிய இடங்களுக்குச் சென்று பதவி ஏற்றுக் கொள்ளாத ஆசிரியர்கள் தமது பதவிகளை இழக்க நேரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமையும் மேற்படி ஆசிரியர்கள் தமது புதிய இடங்களில் ஆஜராகாத பட்சத்தில் பதவியிலிருந்து விலகிக் கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்று வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி, புங்குடுதீவு, உருத்திரபுரம் போன்ற இடங்களுக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் பலர் தமது புதிய இடங்களுக்கு இன்னமும் ஆஜராகவில்லையெனத் தகவல் கிடைத்திருப்பதையடுத்தே கல்விப்பணிப்பாளர் இந்த அறிவித்தலை விடுத்திருக்கிறார்.

# உண்ணுவிரதப் போராட்டம் நேற்று ஆரம்பமானது

## நாளைவரை நீடிக்கும்

(யாழ்ப்பாணம்)

1980-ம் ஆண்டு ஜூலைமாத பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு அதன் எதிரொலியாக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு ஆதரவு தெரிவித்து, நேற்று யாழ். நகரில் மூன்றுநாள் உண்ணுவிரதம் ஆரம்பமானது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள லங்கா தொழிற்சங்க சம்மேளன அலுவலகத்தின் முன்பாக அரசாங்க பொதுச் சேவைத் தொழிற்சங்கத் தலைவர் திரு. எல். ஏ. அமரதாஸ தலைமையில் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் உண்ணுவிரதம் ஆரம்பமானது.

இயக்கங்களின் பிரதிநிதிகளான திருவாளர்கள். பொன் குமாரசாமி, எம். ஸி. சுப்பிரமணியம், சி. இராசையா, ஜி. செந்திவாசன், ஜி. அமிர்தராஜா, ஈ. மயில்வாகனம், எச். எஸ். லியனகே, ஏ. தாமோதரம்பிள்ளை, பி. சிவபாதம், அ. வயித்திலிங்கம் ஆகியவர்கள் மூன்று நாட்களுக்குத்தொடர்ந்து உண்ணுவிரதமிருப்பார்கள். இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து இயக்கப் பிரதிநிதிகளும், பொதுமக்களும் பகுதி பகுதியாக வந்து உண்ணு விரதத்தில் நேற்றுக்கலந்துகொண்டனர்.

யாழ். நகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் நேற்று மாலை உண்ணுவிரததத்துக்கு ஆதரவு நல்கிச் சென்றார்.

இன்று திரு. பொன்.குமாரசாமி தலைமையில் உண்ணுவிரதம் நடைபெறும். தொடர்ந்து நாளையும் நீடிக்கும்.

இந்திய குடியரசு தினம்:

## 33 கலைஞர்களுக்கு ‘கலைமாமணி’ விருதுகள்

(புதுடில்லி)

பாரதத்தின் 33-வது குடியரசு தினம், நேற்று நாடு முழுவதும் குதூகலமாகக் கொண்டாடப்பட்டது.

புதுடில்லியில் நடைபெற்ற கவர்ச்சிமிகு அணிவகுப்பில், இந்தியாவின் ஆயுதபலத்தைச் சித்திரிக்கும் ஊர்திகள் இடம் பெற்றன

தமிழகத்தில், சென்னை மரீனா கடற்கரையில் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது.

33-வது குடியரசு தினத்தையொட்டி 33 கலைஞர்களுக்கு ‘கலைமாமணி’ விருதுகள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட

## அபிவிருத்திகளுக்கு எழுவர்குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் திட்டமிடப்பட்ட அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கென்று ஏழு பேர் கொண்ட குழுவொன்று நேற்று அமைக்கப்பட்டது.

நேற்றுக்கூடியயாழ்மாவட்ட அபிவிருத்திசபை இக் குழுவை அமைத்தது.

இக்குழுவில் பணியாற்ற கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியின் பெயர் பிரேரிக்கப்பட்ட போது, இக்குழுவில் பணியாற்ற திரு. ஆனந்தசங்கரி மறுத்துவிட்டார்.

திட்டமிடப்பட்ட அடிப்படையில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் பொருட்டும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமிருந்து கடனுதவி உட்பட மூலதன உதவி, தொழில் நுட்பஉதவி போன்ற உதவிகளை வழங்கக்கூடிய நிறுவனங்களின் உதவிகளைத் காலதாமதமின்றிப் பெறும் பொருட்டும், நல்லஅபிவிருத்தித்திட்டங்களை உருவாக்குவதற்குப் ஒரு திட்டமிடல் சபையை நிறுவ வேண்டும் என்று திரு. மு. தம்பிமுத்து கொண்டுவந்த தீர்மானம், நேற்று நடைபெற்ற சபையின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதற்கிணங்க இவ்வபிவிருத்திக்குழு அமைக்கப்பட்டது இக் குழுவுக்குப்பருத்தித்துறை எம்.பி.

(8-ம் பக்கம் பார்க்க)

அரிய சந்தர்ப்பம்

எந்த நாட்டிலும் மிக இலகுவான முறையில் பெண்கள் வேலை வாய்ப்புப்பெற ‘‘மின்னியல தையல் பயிற்சி’’ வெளிநாட்டில் பயிற்சி பெற்ற ஆசிரியாகளினுல் அளிக்கப்படும். பயிற்சிக் காலம் ஒரு மாதம்.

ஆரம்பம்: 01–02–82

நாஷனல் அக்கடமி,
மொம்சாக் கட்டிடம், 11. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 2104

மணிவாக்கு

சொல்லப்பயன் படுவர்மேலோர் கரும்புபோல்
கொல்லப்பயன்படும் கீழ்
— குறள்

# நமது நோக்கு

## ஒய்வூதிய பாகுபாடு

முசிப்பாற்றியாகப் பேசுவதிலும் சகாக்களைச் சிரிக்க வைத்துச் சிந்திக்கத் தூண்டுவதிலும் உலகப் புகழ்பெற்றவர் ஆங்கில இலக்கியமேதை டாக்டர் ஜோன்சன். அவருடைய நூல்களில்பெரும் புகழ்பெற்றது அவர் பல்லாண்டுகளாக முயற்சி செய்து உருவாக்கிய அகராதி; சாதாரண அகராதியைப் போலல்லாது ஒவ்வொரு சொல்லுக்கும் சிறந்த சுவையான வியாக்கியானம் — கட்டுரைபோன்ற — அறிந்திருப்பது அதன் தனிச்சிறப்பு

ஒய்வூதியம் என்று நாம் சொல்வது அங்குபென்ஷன் (Pension) என்று குறிப்பிட்டிருக்கிறது. அதனைப் பெறுபவர் ''பென்ஷனர்'' (Pensioner) பென்ஷனீயர் (Pensioneer) அல்ல என்பதையும் நாம் இங்கு சுட்டிக் காட்டவேண்டும். இந்த நாட்டிலே இந்தப்பிழை மிகவும் பொதுவானது.

அது நிற்க இவ்விரு சொற்களுக்கும் அவர் கூறும் கருத்து வியப்பானது! ''ஒருவர் தனது நாட்டுக்குத் துரோகமான செயல்கள் புரிவதில் அரசுக்கு உடந்தையாயிருந்ததற்கு வயோதிபத்தில் அவர் பெறும் உபகாரப்பணம்'' என்பதே அவருடைய வரைவிலக்கணம்.

எனவே ஒய்வூதியம் பெறுவோர் நாட்டுக்குத் 'துரோகம்' செய்தவர்களே என்ற அர்த்தம் அந்த வரைவிலக்கணத்தில் தொனிக்கின்றது. அவர் பைத்தியகாரன் என்றும் அதனைத் தட்டிவிடமுடியாது. ஊன்றிப் பார்த்தால் அதில் உண்மை உண்டு.

இன்று இலங்கையில் ஒய்வூதியர்களின் அவலநிலை அவர்களில் ஒரு சாரார் எதிர்நோக்கும் பாரபட்சம் போன்ற துன்பங்கள் டாக்டர் ஜோன்சன் குறிப்பிட்ட கருத்துக்கு புலமை ஊட்டுகின்றனவா.

ஒய்வூதியமென்ற லட்சணமே அரசாங்க சேவையை மக்கள் நாடுவதற்கு முக்கிய கவர்ச்சியாக இன்றும் இருக்கின்றது. 'கல்யாணச் சந்தையிலும்' அரசாங்க சேவைக்கு ஏற்பட்ட கிராக்கி இதனலேயே! கோழி மேய்ப்பதற்கும் அரசாங்கத்தில் இடம் பிடிப்பதும் இதனலேயே! கறுப்புச் சந்தை வளம்பெற்ற இக்காலத்திலும் அரசாங்க ஊழியர் 'பென்ஷன்' எடுக்கும் வரைக்கும் 'பல்லைக் கடிக்க'ப் பழகியிருக்கின்றனர்.

எதிர்மறையில் நோக்கினல் காலஞ்சென்ற டாக்டர் என். எம், பெரேரா ஒய்வூதிய திட்டத்தை மாற்றி அமைக்க முயன்றபோதும் அதுமுடியவில்லை.

இத்தகைய பெருமை வாய்ந்த திட்டத்தில் பிழைகள் இருக்கலாம். அவற்றை ஆராய்ந்து நியாயம் வழங்குவது அரசின் கடமை.

1971ல் எழுந்த இளைஞர் பயங்கரவாதத்திட்டத்தில் நாட்டின் ஒய்வூதியம் பெறும் ''ஆத்மாக்களை'' அவ்வுலகுக்கனுப்பிவைப்பதம் முதன்மை பெற்றிருந்ததாகஒரு வதந்திஉலாயது.

எவ்விதத்தில் பார்த்தாலும், ஒய்வூதியம் பெறுவோர் ஒரு தனிப்பட்ட குழுவினர்! வேண்டாப் பெண்டிர் போலென்றும் சொல்லலாம்; மன்னிக்கவும். வேண்டாப் புருஷர்கள்! கணவன் இறந்தாலும் அவர் பெறும் ஒய்வூதியம் மனைவி மக்களுக்குண்டு.

இவ்வித அபாய முண்டெனினும் இன்று அடிபடும் பிரச்சினைக்கு தீர்வு காண 1978 தைக்குமுன் இளைப்பாறி ஒய்வூதியம் பெறுவோர் அனைவரும் ஒருங்குசேர்ந்துள்ளனர்.

1978 தைக்குப்பின் இளைப்பாறியவர்களின் ஒய்வூதியம் அவர்களின் மொத்த சம்பள (Consolidated Salary) அடிப்படையில் கணக்கிடப்பட்டிருக்கிறது!

மொத்தச் சம்பளத்திட்டம்—அடிப்படைச் சம்பளமும் அதற்குரிய பலபடிகளும் சேர்க்கப்பட்ட தொகை 1968ல் நடைமுறைக்கு வந்துள்ளது. எனவே சம்பளக்குழு சிபாரிசு செய்தபடி, அச்சம்பளம் பெறுபவர் அதற்குரிய ஒய்வூதியத்தையும் பெறுவதற்குரித்தானவர்.

உரிமையைப் பெருமையாகப் பேசாவிட்டாலும், இல்லாமை என்ற பெரிய 'மை'யால் பீடிக்கப்பட்ட இந்தக் 'கிழட்டுப்பட்டாளத்துக்கு' பழையபாக்கியை கொடுக்கப் பணமிருக்காவிட்டால், அவர்களுக்கு இனியாவது அதிகரித்த பென்ஷன் வழங்க நடவடிக்கை எடுப்பது நியாயமானது.

தெய்வம் விடை கொடுத்தாலும், திறைசேரிப் 'பூசாரிகள்' முட்டுக்கட்டையாக விருப்பார்களென அஞ்சப்படுகின்றது.

பாராளுமன்றம் தனது அங்கத்தவர்களுக்கும் பலவிதமான ஒய்வூதியத் திட்டத்தை வகுக்கும்போது, இந்த விடயத்தில் அக்கறை காட்டுவது நியாயமாகும்; அதிகாரமும் உண்டு.

ஒய்வூதியக் குழுவினர்— குறிப்பிட்ட குழுவினர் குறைவாக இருந்தாலும்— வருகிறதேர்தலில் செல்வாக்கற்றவர்களென்று தீர்த்துவிடமுடியாது.

இன்றைய ஆட்சிப்பலத்துக்கும், இனித்திரும்பிவருவது இலகுவாகுவதற்கும் இந்தக்கோரிக்கை நிறைவேறுவது இன்றியமையாததுபோல் தெரிகின்றது.

## இணைப்பு அதிகாரி

(புலோலி)

யாழ். மாவட்ட பனம்பொருள் அபிவிருத்தி இணைப்பு அதிகாரியாகத் திரு, கே. நடராசா யாழ். அரசாங்க அதிபரினல் நியமனம்செய்யப்பட்டுள்ளார்.

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் விரிவாக்க உத்தியோகத்தரான இவர் வடமாகாண தெங்குப் பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க சமாஜச் செயலாளருமாவார்.

# தமிழ்நாட்டுக் —கோயில்களில் —இசைக்கலை!

கிருஷ்ணவேணி - நோபேட்

தமிழருடைய வரலாற்றை நோக்குமிடத்து அவர்களது வாழ்வில் கோயில் ஒரு முக்கிய இடத்தை வகித்து வந்திருப்பதனை அறிந்துகொள்ள முடிகிறது. இக் கோயில்கள் வழிபாட்டு நிலையங்களாக மட்டுமன்றி தமிழரின் பண்பாட்டினைப் புலப்படுத்துவதுடன் அதனைப் பேணிப்பாதுகாக்கும் நிறுவனங்களாகவும் அமைந்துள்ளன. கட்டிடம், சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளைப்பிரதிபலிப்பனவாகவும், இசை, நடனம், நாடகம் ஆகிய கலைகளை வளர்ப்பனவாகவும் கோயில்கள் திகழ்ந்தன. கோயில்கள் வளர்த்த கலைகளில் ஒன்ருக இசைக்கலை அமைகிறது.

தமிழ்நாட்டுக் கட்டிடக்கலை வரலாற்றில் பல்லவர் காலம் மிகவும் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கிறது. இக்காலப்பகுதியிலேயே முதன்முதலாக அழியாத பொருட்கள் பயன்படுத்தப்பட்டுத்தமிழகத்தில் இந்துக்கடவுளர்களுக்கு கோயில்கள் அமைக்கப்பட்டதாகஅறியமுடிகிறது. இதனல் ''திராவிடக் கட்டிடக்கலையின் தோற்றம் பல்லவர்காலம்'' என்றுகூறப்படுகிறது. இதற்கு முற்பட்ட சங்ககாலம், சங்கம் மருவிய காலப் பகுதிகளில் கோயில்கள் இருந்தன எனக் கூறுவதற்கு அவ்வக்காலப் பகுதிகளில் தோன்றியதாகக் கருதப்படுகின்றஇலக்கியங்கள் சான்ருக உள்ளன. எனினும் அக்கட்டிடங்களின் அமைப்பு அவற்றின் கலைப்பாணி ஆகியவைபற்றித் தெளிவாக அறிந்துகொள்ளமுடியவில்லை. தமிழ்நாட்டுக் கோயில்களின் வரலாற்றைப் பல்லவர்காலப் பகுதியிலிருந்து அறிந்துகொள்வதைப்போலவே, அக்கோயில்களில் வளர்ந்த இசைக்கலை பற்றியும் பல்லவர்காலப்பகுதியிலிருந்தே தெளிவாக அறிந்து கொள்ளமுடிகிறது. பரிபாடல் முதலிய சங்கஇலக்கியங்களில் கடவுளரைப் புகழ்ந்து போற்றும் பழந்தமிழ் இசைப்பாடல்கள் காணப்பட்டபோதும் அவை கோயில்களில் இசைக்கப்பட்டனவா எனக்கூறுவதற்கு சான்றுகள் இல்லை. பல்லவர் காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமண பௌத்தமதங்களுக்கெதிரான பக்தி இயக்கத்தில் ஈடுபட்டு பக்திநெறியைப்போதித்தனர். சமண பௌத்தமத போதனைகள் ஒரு கால கட்டத்தில் மக்கள் மனதைக் கவரக்கூடியனவாக இருந்தாலும் அவை போதித்த தீவிரதுறவறம், பெண்வெறுப்புஆகியன சாதாரண மக்களால் கைக்கொள்ள முடியாத அம்சங்களாகவே இருந்தன. இந்நிலையில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தீவிரதுறவறத்திற் கெதிராகப் பக்திநெறியைப் போதித்ததுடன், கோயிலிலே சென்று இறைவனை வழிபட்டு அதன் மூலம் உய்வடையலாமெனக் கூறினர். மேலும் இறைவனைக் கலைகளின் நாயகனுகவும், கோயில்கள் அத்தகைய கலைகளின் இருப்பிடமாகவும் விளங்குகின்றன எனக்கூறி, பாடியும், ஆடியும் இறைவனை வழிபடலாம் எனவும் மக்களுக்குப் போதித்தனர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் கோயில்கள்தோறும் சென்று அங்கு எழுந்தருளியுள்ள இறைவன் மீது பக்தியுடன் இசையோடு கூடிய பாடல்களைப் பாடினர். திருநாவுக்கரசர் மொத்தம் 49,000 பாடல்களைப் பாடினுர் எனவும், சம்பந்தர் மொத்தம் 16,000 பதிகங்கள் பாடினுர் எனவும் திருமுறைகண்ட புராணம் கூறுகிறது. திருநீலகண்டப் பெரும்பாணரும் அவர் மனைவி மதங்கசூளாமணியும் சம்பந்தர் பாடல்களுக்குஇசை வகுத்தார்கள். தேவாரம்பாடி சைவத்தை வளர்த்த சமய குரவர் மூவருள் காலத்தாற் பிந்தியவர் சுந்தரர் ஆவர். இவர் சிவன்கோயில்கள் தோறுஞ்சென்று பாடியபதிகங்களின் தொகை 38,000 எனத் திருமுறைகண்டபுராணம் கூறுகிறது. வைஷ்ணவ சமயத்தில் நெஞ்சையள்ளும் பாடல்களைப் பாடித் தமிழகத்தில் பக்தி வெள்ளம் பெருக்குவித்தவர்கள் ஆழ்வார்களாவர். இவ் ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் நாலாயிரதிவ்விய பிரபந்தமாகத் தொகுக்கப்பட்டது.

### தமிழ்ப் பண்கள்

தேவாரப் பாடல்கள் யாவும் இசையுடன் பாடப்படவேண்டியவை. அக்காலத்தில் தமிழ்ப் பண்கள் சீரும் சிறப்பும் பெற்று மக்களால் பயிலப்பட்டுவந்தன. தமிழ்ப்பண்களுள் பகலில் பாடப்படவேண்டியவை என்றும், இரவில் பாடப்படவேண்டியவை என்றும் பாகுபாடு உண்டு. தேவார ஆசிரியர் காலத்தில் பயின்றுவந்த பண்களின் தொகை நூற்றுமூன்ருகும். 'ஏழிசையாய், இசைப் பயனுய்' என்று சுந்தரர் இறைவனைப் பாராட்டிப் பாடுவதிலிருந்து இசைக்கு அளிக்கப்பட்டிருந்த பெருஞ்சிறப்புப் புலனுகிறது. 'வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர' எனச் சம்பந்தர் பாடுவதிலிருந்து கோயில்களில் இசை, நடனக் கலைகள் இடம் பெற்றமையை அறியமுடிகின்றது. மேலும் 'பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழ் அவையும் உண்ணின்ற தோர் சுவையும் உறுதாளத் தொலிபலவும்' எனச் சம்பந்தர் பாடுவதிலிருந்து அக்கால இசைக்கலை பற்றி அறிந்து கொள்ளலாம். 'பண் அவனே: பண்ணின் திறனும் அவனே' என்று இறைவனை இசைவடிவாகக் கண்டவர் நாவுக்கரசர். சமய தத்துவங்களில் உயர்ந்தது நாத தத்துவம். நாதத்திலிருந்து இசை தோன்றுகிறது. இறைவனே இசை வடிவாக இருக்கிருன் என்பது சைவக் கொள்கை. இதனல் இசையோடு தோத்திரங்களைப் பாடுவதனல் இறைவன் மகிழ்வான்; அருள் புரிவான் எனச் சம்பந்தர் கூறுகிருர். கோயிலிற் சென்று அலகிடல், திருவிளக்கிடுதல், மலர் தொடுத்துச் சாத்துதல் போன்றவற்ருல் உண்டாகும் புண்ணியத்தைவிட இசையுடன் தோத்திரம் பாடுவது மிக்க புண்ணியத்தைத் தருமென்று அப்பர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'தமிழோடு இசை கேட்கும் இச்சையால் நித்தம் சம்பந்தர்க்குக் காசு நல்கினீர்' என்று சுந்தரர் இறைவனை நோக்கிக் கூறியுள்ளமை, இறைவன் இசைப் பிரியன் என்பதை உணர்த்துகிறது. இத்தகைய குறிப்புக்கள் கோயில்களில் இசை பயிலப்பட்டுவந்ததை விளக்குவனவாக உள்ளன.

### இசைக் கருவிகள்

பல்லவ மன்னர்கள் இசை, நடனம் போன்ற கலைகளை நன்கு வளர்த்தார்கள். இம் மன்னர்களது காலத்தில் பல கோயில்களில் இக்கலைகள் வளர்க்கப்பட்டன என்பது திருமுறைகளால் தெரிகிறது. ஆரூர், ஆலங்காடு, நல்லூர், வீழிமிழலை, மயிலாடுதுறை, பெருந்துறை, பல்லவனீசுவரம், சீர்காழி, புள்ளிருக்குவேளூர், மறைக்காடு போன்ற ஊர்களிலுள்ள கோயில்களில் பண்ணேடு பாடல்கள் பாடப்பட்டன. பல்லவ மன்னர்களில் மிகவும் புகழ்பெற்றவரான மகேந்திரவர்மன் இசைக்கலையில் நன்கு தேர்ச்சிபெற்றிருந்தான். அவன் புதிய இசை ஒன்றை அமைத்ததனல் சங்கீர்ணஜாதி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தான். வீணை கின்னரம், குடமுழா, கொக்கரை, முழவம், குழல், பறை, யாழ்பிடவம், பேரி, தண்டு, தத்தை, துந்துபி, சங்கிணை, போன்ற பல்வேறு இசைக்கருவிகள் கோயில்களிற் பயன்படுத்தப்பட்டன. இசை அனைவருள்ளத்தையும் உருக்கவல்லது. அது குழல், யாழ் வீணை இவற்றுடன் பயிலப்படும் போது மிக்க இனிமை பயக்கும். விழாக்காலங்களிலும், ஏனையகாலங்களிலும் பண்ணிசையுடன் சிவன் ஆடியபல வகை நடனங்களை நடனமாதர்கள் நடித்துக் காட்டியமை மக்களுக்கு செவி விருந்தும், விழி விருந்துமாய் அமைந்தன. இசை நடனக் கலைகள் காம இன்பத்தைப் பயப்பவை எனச் சமண பௌத்தரால் விலக்கப்பட்டனவாகும். இந்துக்களைப் பொறுத்தவரை அவை இனிமை பயக்கும் தெய்வீகக் கலைகளாகவே அமைந்தன. கலையின் அருமையை உணர்ந்த இந்துக்கள் கலையே உருவான இறைவனிடம் ஈடுபாடு கொண்டனர். பண்ணிறைந்த பாடல்களைப் பாடியும் ஆடியும் இறைவனை வழிபடலாயினர். இவ்வாறு பல்லவர் காலப்பகுதியில் கோயில்களை அடிப்படையாகக் கொண்டு இசைக்கலை நன்கு வளர்ச்சியடைந்திருந்தது.

### தேவரடியார்கள்

சோழர்காலப் பகுதியிலும் கோயில்களை அடிப்படையாகக்கொண்டு இசைக்கலை நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. குறிப்பிட்ட நாட்களிலும், கோயில்விழாக்கள் ஊர்வலங்களிலும் ஆடல் பாடல்கள் நிகழ்ந்தன. கோயில்களில் இசைக்கலை வளர்ச்சிக்குக் காரணமாக இசையிலும் கூத்திலும் வல்லுனரான பெண்கள் பலர் சோழர் காலத்தில் கோயிற் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் கல்வெட்டுக்களில் தேவரடியார்கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். தனிச்சேரிப்பெண்டுகள்; பதியிலார், கோயிற் பிணக்கள் போன்ற பெயர்களும்இவர்களுக்குரிய பெயர்களாகவழக்கிலிருந்தன. தேவாரம், திருவாசகம் ஓதுவதும் நடனமாடுவதும் இவர்களது சிறப்பான தொண்டுகளாகும். இராஜராஜ சோழன் தனது தஞ்சைப்பெரிய கோயிலுக்கு தமிழ்நாடு முழுவதிலுமிருந்த பல கோயில்களிலிருந்து ஆடல் பாடல்களில்வல்ல நானூறு பேரை ஆடல்பாடல்கள்

(7ம் பக்கம் பார்க்க)

வெள்ள நிவாரண பணத்தை

# மனைவி கொடுக்காததினுல்

## மனமுடைந்து கணவன் தற்கொலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வெள்ள நிவாரணமாக பெற்ற பணத்தை மனைவி கொடுக்க மறுத்ததால் கணவர் மனமுடைந்து நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

குடமியனைச் சேர்ந்தசின்னக்குட்டி சின்னத்தம்பியின் (வயது 26) மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது,

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் மரண விசாரணை நடத்தினுர்.

மனைவி செல்வராணி சாட்சியமளிக்கையில், தான் நாலு வருடங்களுக்கு முன் இறந்தவரை விவாகஞ் செய்ததாகவும் தங்களுக்கு இரு குழந்தைகள் உண்டென்றும் தங்களை முறையாகப் பராமரிப்பதில்லையெனவும் நித்தமும் குடித்துவிட்டு வந்து என்னோடு சண்டைபிடிப்பார் எனவும் இந்த மாதம் 13ம் திகதி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வெள்ள நிவாரணப்பணமாக 325 ரூபா கிடைத்ததாகவும் அதை வாங்குவதற்காகத் தன்னோடு நித்தமும் சண்டை பிடித்து வந்ததாகவும் கூறினுர்.

சம்பவதினம் தன்னைத்தாக்கிப் பணத்தைத் தரும்படி கேட்கத்தான் கொடுக்க மறுத்ததாகவும் சரிபார் உனக்குப்பாடம்படிப்பிக்கிறேன்என கூறிச் சென்று நச்சுத் திராவகம் அருந்தியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவரது தாயார்ஆறு மாதத்திற்கு முன்னும் தகப்பனுர் ஒரு வருடத்திற்கு முன் இறந்ததிலிருந்து இவரது குடி அதிகரித்ததெனவும் கடன் தொல்லையும் அவருக்கு இருந்ததெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மரண விசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (க)

# உபவேந்தரைக் கொல்ல முயன்ருர்களாம்!

### கேரளத்தில் 23 மாணவர் கைது

திருவனந்தபுரம், ஜன 26

கேரளப் பல்கலைக்கழ உபவேந்தர் கலாநிதி எ. வி. வருகேஷைக் கொலைசெய்ய முயன்றதாக அப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த 23 மாணவர்களைக் கேரளப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

உபவேந்தர் கலாநிதி வருகேஷ் கடந்த வியாழக்கிழமை காலை 8 மணியளவில் பல்கலைக்கழக செனட் கூட்டமொன்றிற்குச் சமூகமளிக்க தனது காரில் சாரதி சகிதம் வந்து கொண்டிருந்தபோது பல்கலைக்கழக முன்றலுக்கருகாமையில் 25 மாணவர்களால் வழிமறிக்கப்பட்டாரென்றும் மாணவர்கள் இவரதுது கார் கண்ணுடிகள் மீது கற்களை வீசி அவற்றைச் சேதப்படுத்தியதுடன் பெருங்கல்லொன்றை காரினுள் வீசியதால் உபவேந்தருக்குக் கையில் காயமேற்பட்டதென்றும் கார்க்கதவுகளை திறந்து உபவேந்தரை வெளியே இழுக்க முயன்ற வேளை சாரதி ஒருவாறு சமாளித்துக்கொண்டு காரை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்ருரெனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் சில நிமிடங்களே நீடித்ததாகவும் பொலிஸ் நிலையத்திலிருந்தே உபவேந்தரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது,

கைதாகியுள்ள மாணவர்கள் மார்கஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (கி)

# போலந்து: அமெரிக்கா தலையிடுகிறதாம்

மாஸ்கோ, ஜன 26

''சோவியத் யூனியன் சம்பந்தமாக ஜனதிபதி றீகன் ஒருதலைப்பட்சமாக எடுத்துள்ள பாரபட்ச நடவடிக்கைகள் சர்வதேசநியதிகள் அனைத்தையும் மீறுவதாகும்'' என்று '''பிராவ்தா'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

''ஹெல்சிங்கி மாநாட்டின் இறுதி உடன்பாட்டில் அமெரிக்கா கையெழுத்திட்டுள்ளது. அந்த உடன்பாட்டைத் துரோகத்தனமாக அமெரிக்கா இப்பொழுது மீறுகிறது. ''இந்த உடன்பாட்டில் கையெழுத்திடும் நாடுகள் இதில் கையெழுத்திட்டுள்ள மற்ருெரு நாட்டின் உள்விவகாரத்தில் அல்லது வெளிவிவகாரத்தில் நேரிடையாகவோ மறைமுகமாகவோ, தனியாகவோ, கூட்டாகவோ, எவ்விதத் தலையீட்டையும் மேற்கொள்ள மாட்டாது'' என்று ஹெல்சிங்கி இறுதி உடன்பாட்டின் வாசகம் கூறுகிறது. இதன்படி பார்க்கும் பொழுது போலந்தின் உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுகிறது. மறைமுகமாக அல்லாமல் பகிரங்கமாகவே தலையிடுகிறது. எதிர்ப்புரட்சி சக்திகளை ஊக்குவித்து வளர்கிறது'' என்று மேற்படி செய்தி கூறுகிறது.

''போலந்து நிகழ்ச்சிகளைப் பயன்படுத்தி ஐரோப்பிய நிலவரம் முழுவதிலும் நெருக்கடியை உண்டாக்கவும் ஐரோப்பாவில் ஒரு கடுமையான மோதல் நிலையை உருவாக்கவும் அமெரிக்கா விரும்புகிறது. கெடுபிடிப் போர்க்காலத்திற்கு ஐரோப்பாக் கண்டனத்தைப் பின்னேக்கித் தள்ள வேண்டும் உன்று அது திட்டமிடுகிறது. தனது நேட்டோ கூட்டாளிகளிடமிருந்தும்இதையே

(6ம் பக்கம் பார்க்க)

# ''அறிவு தீமையை அகற்றி நன்மையை கொடுக்கிறது''

(யாழ்ப்பாணம்)

''அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அலங்காரப்பந்தல்களை விட அறிவுச் செல்வங்களைத் தான் விருப்பினுர்கள். அலங்காரங்கள் தீமையைத் தான் உண்டாக்குகின்றன. அறிவு தீமையை அகற்றி நன்மையைஉண்டாக்குகின்றது''.

மேற்கண்டவாறு யாழ். சன்மார்க்க இயக்கத்தினுல் நடாத்தப்பட்ட 17வது ஆண்டு இஸ்லாமிய அறிவுப் போட்டிகளில் மத்தியஸ்தராகக் கலந்து கொண்ட மொஹிதீன் பள்ளி பேஷ் இமாம் ஏ. எல். எம். அஷ்ரப் உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ''இறைவன் கொடுக்கும் கொடைகளில் மிகப்பெறுமதி வாய்ந்தது அறிவுச் செல்வமாகும். இளம் சிறுர்கள் மிகத் திறமையாக குர் ஆனைஓதுவதிலும், அதை எழுதுவதிலும் ஆர்வம் காட்டுவது போற்றக் கூடியதாகும்'' என்ருர்.

யாழ், சன்மார்க்க இயக்கத்தினுல் நடாத்தப்பட்ட 17வது ஆண்டு இஸ்லாமிய அறிவுப் போட்டிகளிற் பரிசு பெற்றேர் விபரம் வருமாறு:

**யாசின் மனனம்**
**ஆண்கள் பிரிவு**

1. எப். எம். நவாஸ்தீன்— தீனிய்யா மத்ரஸா, 2. எம். ஐ. முஜீபர்— தீனிய்யா மத்ரஸா, 3. எம்.பி.எம். றிஸ்வி தீனிய்யா மத்ரஸா.

**யாசின் மனனம்**
**பெண்கள் பிரிவு**

1. ஐ. ரி. ஜுலியாஞ — மன்பஉல் உலூம் மத்ரஸா, 2. எம். ஐ. முஸ்பிரா — தீனிய்யா மத்ரஸா, 3. எம். எஸ். ஏ. அனீரா —மன்பஉல் உலூம் மத்ரஸா.

**அரபு எழுத்து**
**ஆண்கள்**

1, ஏ. ஜெரீர்— தீனிய்யா மத்ரஸா, 2. எம். சி. இன்ஷார்— தீனிய்யா மத்ரஸா, 3. எம். ரி. எம். றமீஸ் — தீனிய்யா மத்ரஸா.

**அரபு எழுத்து**
**பெண்கள்**

1. எம். எவ். எம். அஜீதா தீனிய்யா மத்ரஸா, 2. எஸ். றிஞேஸா—தீனிய்யாமத்ரஸா 3. எம். வை. பஸ்மிஞ — தீனிய்யா மத்ரஸா.

**பொது அறிவு**
**ஆண்கள்**

1. எம். எ. எம். ஆஸிம் — மஸ்ர உத்தீன் பாடசாலை, 2. ஏ. சி. எம். றலீன்—ஒஸ்மானியா கல்லூரி, 3. எம். ரி.எம் றமீஸ் — தீனிய்யா மத்ரஸா.

**பொது அறிவு**
**பெண்கள்**

1. எம். வை. எம்.பஸ்மிஞ —தீனிய்யா மத்ரஸா, 2. ஏ. ஆர். றிஞேஸா — தீனிய்யா மத்ரஸா, 3. ஏ. சி. கிதாயா —கதீஜா மகாவித்தியாலயம்.

காங்கேசன்துறை பகுதியில்

# கட்டாக்காலி நாய்கள் கொல்லப்பட்டன

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைப் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரிந்த 212 நாய்களுக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது. அவை பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து வந்த சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்களே இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் விசர் நாய்க்கடியை ஒழிக்கு முகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, முதலில் நாய்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. மாவட்ட அபிவிருத்திச் சபை காங்கேசன்துறை உப அலுவலக எல்லைக்குள் 430 நாய்களுக்கு இத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

இதனையடுத்து கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் எல்லைக்குள் 212 கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அவை கொல்லப்பட்டன.

கொழும்பிலிருந்து வந்த விசேட சாதனங்கள் பொருத்தப்பட்ட வான் மூலமாக இந்த நாய்கள் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டன.

இத்தகைய நடவடிக்கைகள் காங்கேசன்துறையை யடுத்த பகுதிகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# 'நவத்'துக்கு வெள்ளிவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் அரசியலில் ஈடுபட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியடைவதால் அவரது சேவை நலனைப் பாராட்டி விழாவெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டம் நுணுவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் என். சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்தும் தொகுதிப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்,

திரு. என். சிதம்பரநாதன் பேசுகையில் 1956ம் ஆண்டு தொடக்கம் தொடர்த்து இத் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தியது சாமானிய விஷயமல்ல என்று அவர் எதிர்க் கட்சியிலிருந்து கொண்டும் இத் தொகுதிக்குச் செய்த சேவையை நாம் மறந்துவிடக் கூடாது என்றும் கூறினுர்.

இவ்வருடம் ஜூன் மாதம் 5ம் திகதி அவரது பிறந்த நாளில் பெரு விளாவாகக் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டு. விழாக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# துலாக்கயிறு அறுந்து சிறுவன் பலி!

(சாவகச்சேரி)

கிணற்றில் தண்ணீர் அள்ளும்போது துலாக்கயிறு அறுந்ததால், கிணற்றில் வீழ்ந்த 12 வயது சிறுவன் நீரில் மூழ்கி மரணமானுர்.

மீசாலையை சேர்ந்த தம்பையா நகுலேஸ்வரனின் மரண விசாரனையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது,

சாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் மரணவிசாரணை நடத்தினுர்,

இறந்த நகுலேஸ்வரன், மாதகலைச் சேர்ந்த தம்பையாவின் மகன் என்றும், மீசாலையில், சிறிய தகப்பன் வீட்டில் தங்கியிருந்து மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்தாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணையின் பின் விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப் பட்டது. (க)

## கும்பாபிஷேகம்

(புலோலி)

பருத்தித்துறை பத்திரகாளி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 29ம் திகதி நடைபெறவுள்ளது. கரணவாய் சிவாகம ஞானபானு பிரம்மஸ்ரீ நா. சிவசாமிக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறுமென ஆலய திருப்பணிக்குழு தெரிவித்துள்ளது.

# புதியகட்டடம்

(பண்டத்தரிப்பு)

காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயத்திற்கு 75 ஆயிரம் ரூபா செலவில் புதிய வகுப்பறைக் கட்டடம் நிறுவப்படவுள்ளது. இதற்கான நிதியை வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பன்முகப்படுத்தப்பட்ட வரவு—செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுசெய்துள்ளார்.

# பாரதியின் ஆக்கங்களை பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகள் இன்று வேண்டும்

### பேராசிரியர் கைலாசபதி கருத்து

(மாவிட்டபுரம்)

''பாரதி நூற்றுண்டு விழாக் கொண்டாட்டங்கள் இடம் பெற்றுவரும் இச்சமயத்தில் பாரதியின் ஆக்கங்களை மக்களுக்கு எடுத்துக்கூறக் கூடிய முறையில் நாட்டியங்கள், இசைநிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக இசைவிழாக்கள்நடத்தப்பட வேண்டியதவசியம்''.

இவ்வாறு மருதனமடம் இராமநாதன் கல்லூரி நுண்கலைப்பிரிவினரால் நடத்தப்பட்ட இசைவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்துப்பேசிய யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் க. கைலாசபதி கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''கலைத்திறமைகளையும், கலை ஆர்வத்தையும் வளர்ப்பதற்கு இசைவிழாக்கள் அவசியமாகின்றன. ஆனல் நுண்கலை மாணவர்களுக்கு மட்டும் என்றில்லாமல் பரந்த ரீதியில் இவ்விசை விழாக்கள் கொண்டாடப்படவேண்டும். வெளியிலுள்ள கலைஞர்களையும் சேர்த்து சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். காலப்போக்கில் இப்படியான மாற்றங்கள் நிகழும் என எதிர்பார்க்கிறேம்.

''பாரதியாரின் நூற்றுண்டு விழா கொண்டாட்டங்கள்தற்போது கொண்டாடப்பட்டு வருகின்றன. சமூக சீர்திருத்தவாதியான பாரதியார் எத்தனையோ சிறந்த கவிதைகளை பாடல்களை நமக்காக ஆக்கித் தந்திருக்கிருர். உற்சாகமூட்டக்கூடிய அவரது ஆக்கங்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அவரது ஆக்கங்களை பிரதிபலிக்கக்கூடியதான நாட்டிய நிகழ்ச்சிகள், இசைநிகழ்ச்சிகளை உள்ளடக்கி இசைவிழாக்கள் நடத்தப்பட வேண்டியதவசியமாகும், அவ் விழாக்கள் தேசியரீதியான விழாக்களாக அமையவேண்டும்'' என்ருர்.

# 27%

**இலங்கையில் இரண்டாவதாக ஆரம்பமான பினான்ஸ் கம்பனி. ஸ்தாபிதம்: மே 1940-ம் ஆண்டு**

இயக்குநர்கள்

திரு. ஜே. எல். பி. கொத்தலாவெல, ஏ. எம். எக்ஸ். லண்டன் (தலைவர், நிர்வாக இயக்குநர்)
திரு. பி. டி. விசுவாசம் எவ். சி. ஏ. (நிதி இயக்குநர்)
சட்டத்தரணி திருமதி பி. கே. கருணநாயக்கா (பொது முகாமையாளர்)
திருமதி என். மடவெல (காரியதரிசி)
திரு. டி. ஆர். சேனநாயக்கா ஏ. எம். எக்ஸ். ஏ. லண்டன்
சட்டத்தரணி திரு. கே. என். சொக்சி

வியாபார நோக்கம்

முதலீட்டு வைப்பு, காணி கொள்வனவு, விற்பனவு, கைத்தொழில், இரத்தினக்கற்கள், சந்தைப்படுத்தல் போன்றவற்றுக்கு நிதி அளித்தல்

தொழிலாளர்களுக்கு பங்குகள் வழங்கிய இலங்கையின் முதலாவது பினான்ஸ் கம்பனி இதுதான்

| வருடம் | வழங்கப்பட்ட பங்கீட்டு முதல் | வருமான சேமிப்பு | முதலீட்டு சேமிப்பு | மற்றைய பற்று விபரம் | வரி விதிப்புக்கு முன்னர் உள்ள முதலீட்டு வைப்பு | வரி விதிப்புக்கு பின்னர் உள்ள நிகர லாபம் | பங்கு லாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | 1,200,000 | 1,038,278 | 2,195,700 | 771,277 | 92,070 | 82,070 | 5 |
| 1974 | 1,200,000 | 1,065,951 | 6,045,843 | 2,681,195 | 264,328 | 147,328 | 10 |
| 1975/76 | 1,200,000 | 1,315,706 | 15,400,048 | 9,106,588 | 361,480 | 361,480 | 7·5 |
| 1976/77 | 1,200,000 | 664,721 | 31,894,498 | 4,276,988 | 395,762 | 395,762 | 10 |
| 1977/78 | 1,200,000 | 1,698,335 | 41,203,537 | 3,974,723 | 167,532 | 167,582 | 10 |
| 1978/79 | 1,210,150 | 1,727,524 | 57,284,462 | 1,866,699 | 145,561 | 145,561 | 10 |

வட்டி வீதம்

தவணை வைப்புக்கணக்கு

| முதலீடு செய்யவேண்டிய தொகை | முதலீட்டுக் கால எல்லை | செலுத்தப்படும் வட்டி வீதம் | செலுத்தப்படும் வட்டி வீதம் |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 12 மாதங்கள் | 20 % வருடம் | மாதம்/காலாண்டு |
| ரூபா. 500/- ரூபா. 1,00.000/- | 24 மாதங்கள் | 22 % வருடம் | அரைவருடம்/ |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 24 % வருடம் | வருடந்தோறும் |

புதிய அதிவிரைவான பயனளிக்கும் வைப்புக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 18 மாதங்கள் | 22 % வருடம் | உங்கள் முதலீடு |
| ரூபா. 500/- ரூபா. 1,00,000/- | 24 மாதங்கள் | 25 % வருடம் | முதிர்ச்சிஅடைந்ததும் |
| ரூபா. 1,00,000/- அதற்கு மேலும் | 24 மாதங்கள் | 27 % வருடம் | முதலீடும் வட்டியும் செலுத்தப்படும் |

முதலீட்டுச் சேமிப்புகள்

| | | |
|---|---|---|
| ஆகக் குறைந்த முதலீடு ரூபா. 50/- | 24 மாதங்கள் | 15 % வருடம் |

+ இந்த இலாபக்கணக்குகள் ஊழியர்களுக்கு இலாப ஊக்குவிப்புப்பணம் வழங்கியபின் உள்ள தொகையாகும்.

31-3-81வரை ரூபா 10கோடிக்கு மேல் நிலையான வைப்புத்தொகை

## த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,

மூன்றும் மாடி, சிலிங்கோ மாளிகை, கொழும்பு-1
கிளை: 249/C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7680
மற்றும் 14 கிளைகள் நாடு பூராவும்.


மாற்றம் பெறும் அரச ஊழியர்

## தளபாடங்களை கொண்டுசெல்ல அரசாங்க லொறிகள் 'கிடைக்கும்

(கொழும்பு)

அரச உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்று செல்லும் போது வீட்டுத்தளபாடங்களை ஏற்றிச்செல்வதற்கு அரசலொறிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வாடகைக் கட்டண அடிப்படையிலேயே இப் போக்குவரத்து வசதி வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் திரு. நிஸங்க விஜேரத்ன நீதித்துறையினர் இடமாற்றம் பெற்றுச்செல்லும்போது தளபாடங்களை ஏற்றிச்செல்ல அரச லொறிகளை வழங்க வேண்டுமெனக் கேட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து அரசாங்கம் இவ் வசதியை சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் வழங்கத் தீர்மானித்துள்ளது.

தனியார் லொறிகளில் தளபாடங்களை ஏற்றிச்செல்வதனால் ஏற்படும் அதிக செலவைச்சமாளிக்கவே அரசாங்கம் இப்போக்குவரத்து வசதியை வழங்க முன்வந்துள்ளது.

இத்தீர்மானம் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் விரைவில் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## ஐ.தே.க.கிளை கோரிக்கை

(சாவச்சேரி)

கொடிகாமத்திற்கும்—கிரிமலைக்குமிடையே நடைபெற்று வரும் பஸ் சேவையை எழுதுமட்டுவாள் வரை நீடித்தால் தவசிகுளம், மிருசுவில், மிருசுவில் வடக்கு மகளிர் குடியேற்றத்திட்டம், ஒட்டுவெளி கரம்பகம், எழுதுமட்டுவாள் ஆகிய இடங்களிலுள்ள மக்கள் பெரும் நன்மையடைவார்கள்,

தவசிகுளம் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைத் தலைவர் திரு. எஸ். சிங்கராசா, வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவரை மகஜர் மூலம் மேற்கண்டவாறு கேட்டுள்ளார். முழு பஸ்களையும் விடமுடியாவிடினும் சிலவற்றையாவது விடுமாறு கோரியுள்ளார். இதன் பிரதி யாழ். மாவட்ட அமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (க)

முத்திரையிடப்படாத

## பெருமளவு தராசு, படிகள் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

பலகாலம் முத்திரையிடப்படாமலும், சட்ட விரோதமாகவும் வியாபாரத்திற்குப் பாவிக்கப்பட்டுவந்த தராசுகளையும், அளவைப்படிகளையும். பருத்தித்துறை, புலோலி கரவெட்டி, உடுப்பிட்டி ஆகிய இடங்களிலுள்ள பொதுச் சந்தைகளில்ருந்து விலைக்கட்டுப் பாட்டதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இச் சந்தைகளிலிருந்து கைப்பற்றப் பட்ட தராசு, அளவுப்படிகளில் 99 சதவீதமானவை மிகவும் பழமை வாய்ந்தனவென்றும் சட்டப்படி முத்திரையிடப்படாதவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலைக்கட்டுப் பாட்டதிகாரிகள் 350 தராசுகளையும் சுமார் 600 தராசுப் படிகளையும் மேற்படி பரிசோதனைகளின் போது கைப்பற்றியதாகவும், பல வியாபாரிகள் தம்மைக் கண்டதும் சந்தையிலிருந்து ஓடிவிட்டதாகவும் மேலும் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட தராசுப் படிகளிலொன்று 1968ல் முத்திரையிடப் படாததென்றும் அதற்குப் பின்னர் புதுப்பிக்கப் படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

“வேலை இழந்தோர் பிரச்னை:

## மனிதாபிமானத்தோடு அணுக வேண்டும்”

(புங்குடுதீவு)

“இலங்கை அரசாங்கம் உண்மையாகவே ஜனநாயகத்தையும் சமதர்மத்தையும் தொழிலாளர் உரிமைகளையும் பறிப்பதாக இருந்தா 1980ம் ஆண்டு ஜூலை மாதம் வேலை நிறுத்தம் செய்தமைக்காகவேலைஇழந்துநிற்கும் சகல ஊழியர்களையும் எதுவித நிபந்தனையுமின்றி திரும்பவும் வேலைக் கெடுப்பதோடு அவர்களின் சேவை மூப்புக்கோ வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த காலச் சம்பளத்துக்கோ எதுவித பாதிப்புமின்றி நடந்து கொள்ள வேண்டும். இலட்சக்கணக்கான மக்களின் வயிற்றுப் பசியைத் தீர்க்கும் பிரச்னையாக அரசு இதைக் கருதி மனிதாபிமானத்தோடு நடந்துகொள்ள வேண்டும்.”

இவ்வாறு அரசைக் கோரும் தீர்மான மொன்றை புங்குடுதீவு இளந்தமிழர் மன்றச் செயற்குழு மன்றத்தலைவரான சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் தலைமையில்மன்ற தலைமைச் செயலகமான அலுவலத்தில் கூடி ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

புங்குடு தீவு அரசினர் வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியின்மையால் மக்கள்படும் சிரமத்தை கருத்தில்கொண்டுஒரு மாவட்ட வைத்திய அதிகாரியை விரைவில் நியமிக்குமாறும் கட்டப்பட்ட பின்னர் நீண்ட நாட்களாகப் பூட்டப்பட்டிருக்கும் புங்குடுதீவு தன்னியக்கத் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தினை திறந்து இயங்க வைக்குமாறும் சம்பந்தப்பட்டோரைக் கோருவதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கலால் உத்தியோகத்தர் பற்றி

## வடமாகாண தெங்குபனம் பொருள் சமாஜம் அமைச்சருக்கு புகார்

(புலோலி)

வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கச் சமாஜம், கலால் இலாகா உத்தியோகத்தர்கள் பற்றி நிதியமைச்சரிடம் முறையிட்டுள்ளது.

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்காக நிர்வகிப்பதில் கலால் இலாகா உத்தியோகத்தர்கள் தடையாக இருப்பதாகச் சமாஜம் நிதியமைச்சர் திரு. ரொனி டீ மெல்லுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

யாழ். மாவட்டப் பனம்பொருள் அபிவிருத்திஇணைப்பு அதிகாரியும், வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கச் சமாஜச் செயலாளருமான திரு. கே. நடராசா இம்மகஜரை நிதியமைச்சருக்கும், யாழ். அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

வடபகுதியில் உள்ள 19 தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தின்கீழ் சுமார்இயங்கிவரும்2,5கள்ளுத் தவறணைகளையும் ஒழுங்காக நிர்வகிப்பதற்கு இங்குள்ள கலால் உத்தியோகத்வர்கள் இடைஞ்சலாக இருக்கிறார்கள் என்றும, இதனால் சீவல் தொழிலாளர் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவருகிறார்களென்றும் பிரஸ்தாப அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

### மீண்டும் ஜே. பி.யானார்

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் பழம்வீதியைச்சேர்ந்த திரு. சின்னத்தம்பி இராசு யாழ்ப்பாண நீதி பரிபாலன மாவட்டத்திற்கு சமாதான நீதவானாக நீதி அமைச்சரினால் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

சமூகசேவையாளரான இவர் யாழ், சிறைச்சாலைக் கைதிகள் சீர்திருத்த சேவையாளரும் யாழ்.பொலிஸ் — பொதுமக்கள் நல்லுறவுச் சங்க நிர்வாக சபை உறுப்பினரும், கந்தர்மடம் பழம்வீதி ஞானசோதி சனசமூகநிலைய போஷகரும், யாழ்ப்பாண மாநகர உத்தரவு பெற்ற வியாபாரிகள் சங்க உபதலைவரும், கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் உபதலைவரும் ஆவார்.

### மின்னொளி கிடைத்தது

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர், முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு, பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை ஆகியோர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாகத் துணுக்காய்ப் பகுதிக்கு மின்னொளி கிடைத்துள்ளது.

முதலில் இம் மின்னொளி, மல்லாவி அரசினர் வைத்திய சாலைக்கும், துணுக்காயில் அமைந்துள்ள தொலைத் தொடர்புத் திணைக்களத்தில் அமைந்துள்ள வெளிநாட்டுத் தொலைத் தொடர்பு நிலையத்துக்கும் விநியோகிக்கப்பட்டது

பின்பு படிப்படியாகக் கிராமங்களுக்கும், தெருக்களுக்கும், அரசாங்கத் திணைகளங்களுக்கும் விநியோகிக்கப்படும் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### வங்கித்திட்டத்துக்கு அதிக ஆதரவு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகமும் இலங்கை வங்கியும் இணைந்து அண்மையில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடாத்திய பிரசாரக் கருத்தரங்கின்போது இடம் பெற்ற நடமாடும் வங்கியில் ஒரேதினத்தில் சுமார் இரண்டு லட்சம் ரூபா வைப்புக்கணக்கு இடப்பட்டுள்ளது. தேசிய அறக்கொடைத் திட்டம், தேசிய ஓய்வூதியத்திட்டம் ஆகிய திட்டங்களில் பெரும்பாலான பொதுமக்கள் இந்த நடமாடும் வங்கியில் கணக்குகளை வைப்புச்செய்து ஆரம்பித்துள்ளனர்.

### புதிய கட்டிடத்தை திறந்துவைத்தார்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை செபஸ்த்தியார் சதுக்கத்தின் புதிய கட்டிட திறப்பு விழாவும், செபஸ்த்தியார் இளைஞர் மன்றத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவும் நடைபெற்றது.

மன்றத் தலைவர் திரு. ஏ. அமலன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் புதிய கட்டிடத்தை அருட் திரு. ஜெபநேசன் அடிகளார் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்து ஆராதனை நடாத்தினார்.

அதனை அடுத்து இளைஞர் மன்ற வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

### திறம்பட சேவையாற்றினார்

(சாவகச்சேரி)

மக்களுக்குச் செய்யும் தொண்டுகள் எல்லாவற்றிலும் தபாற்சேவை மிகவும் புனிதமானது. இங்கு அடிக்கடி நான் விஜயம் செய்யும் போது இங்கு திறம்பட இவர்கள் சேவையாற்றுவதைக் காணக்கூடியதாகவிருந்தது.

கொடிகாமம் தபால்நிலைய அதிபராகக் கடமையாற்றி அனுராதபுரிக்கும், உதவித் தபால் அதிபராகக் கடமையாற்றி மூதூருக்கும் மாற்றலாகிச் செல்லும் திருவாளர்கள் பீ. ஸ்ரீரங்கராசா, சீ. ஜெயசேகரம் ஆகியோருக்கு கொடிகாமம் தபால் நிலைய முன்றலில் நடந்த பாராட்டு விழாவிற்குத் தலைமைதாங்கி உரையாற்றுகையில் வட பிராந்திய தபால் அத்தியட்சகர் திரு. ஏ. சி. கந்தசாமி குறிப்பிட்டாா.

வரணி உபதபால்அதிபர் திரு எஸ். இராசரத்தினம், கச்சாய் உபதபால் அதிபர் திரு எஸ். சின்னையா, திரு சி, கந்தையா, திரு எஸ், சாம்பசிவம் உட்படப் பலர் அவர்களது சேவையைப் பாராட்டிப் பேசினர்.

### மரம் கடத்தல் வழக்கு

(சாவகச்சேரி)

சட்ட விரோதமாக மரங்களை கடத்தியதாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எம். எம். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் சட்டவிரோதமாக உததரவுப்பத்திர மின்றி மரங்களை கடத்தியதாகப் புன்னாலைக்கட்டுவனைச்சேர்ந்த கதிரிப்பிள்ளை இரத்தினம் சிறிதரன் ஆனந்தராசா ஆகியோருக்கெதிராக கிளிநொச்சி வனபரிபாலன பகுதி வட்டார அதிகாரி எஸ். பாலரஞ்சனால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனின் அனுசரணையுடன் சட்டத்தரணி வி. என். நவரத்தினம் ஆஜரகினார். விசாரணை பெப்ரவரி3ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க)

(சாவகச்சேரி)

சாவகச்சேரிக்கு இந்த மாதம் தொடக்கம் புதியசுகாதார வைத்தியதிகாரியாக திரு. கே. நடராசா நியமிக்கப்பட்டுள்ளார். வீ

# மொறஸ்டான்

கிருமிநாசினியும், பங்கசு கொல்லியும்.



மிளகாய், திராட்சை, புகையிலை, கெக்கரி, தேயிலை மற்றும் பயிர்களைத் தாக்கும் சிற்றுண்ணி, செஞ்சிலந்தி, ஊதாப் பூச்சிகளையும் பயிர் பங்கசு உட்பட படர் பூஞ்சனத்தையும் கட்டுப்படுத்தும். தண்ணீரில் கரையும் தூள்.

ஒரு "பாயர்" உற்பத்தி

ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் ரோட், கொழும்பு 10.

Mel Ads


# ஆசிரியர்கள் இன்று புறக்கணிக்கப்படுகின்றனர்

## பாடசாலை அ. சங்க காரியதரிசி கவலை

(யாழ்ப்பாணம்)

'ஆசிரியர்கள்முன்னர் சமூகத்தில் நன்கு மதிக்கப்பட்டார்கள். ஆனல் இன்று அவர்கள் சகல விஷயங்களிலும் புறக்கணிக்கப்படுகின்றனர். இந்த நிலை மாறி, பெற்ருேர், ஆசிரியர் இணையும் சூழ்நிலை உருவாகவேண்டும்' என்று யாழ். மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்காரியதரிசி திரு. கா. சி. முத்துக்குமாரு தெரிவித்துள்ளாளர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பாடசாலை அதிபரும் இணைந்து மேற்படி பாடசாலை விடுதியில் நடத்திய மதிய போசன விருந்துபசாரத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில், பெற்ருேர்—ஆசிரியர்களிடையே நெருக்கமான உறவு காணப்படவேண்டும் என்றும் இருசாராரும் பரஸ்பரம் இணையும் நிலை இந்த நாட்டில் ஏற்படவேண்டும் என்றும் இதன்மூலம் ஆசிரியர்களின் நிலையும் உயரும் என்றும் கூறினர்.

இதனைக் கருத்திற் கொண்டே பெற்ருேர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் யாவரையும் ஒன்ருக இணைத்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தை இயக்க அரசும் முன்வந்துள்ளது என்றும் திரு. கா. சி. முத்துக்குமாரு குறிப்பிட்டார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உப தலைவர்களில் ஒருவரான திரு. வி. ரி. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி மதியபோசன விருந்துபசாரத்தில் யாழ். மத்திய கல்லூரியின் சகல ஆசிரியர்களும், அபிவிருத்திச்சங்க நிர்வாக அங்கத்தவர்களும் பங்குபற்றினர்.

அதிபருக்கும் அவரின் பாரியாருக்கும் அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் பொதுக் காரியதரிசி திரு. முத்துக்குமாரு தம்பதிகள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

# மட்டக்களப்பில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 247 பாடசாலைகளிலும் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கு கல்வி பயிற்றுவதற்கு 18 பட்டதாரி ஆசிரியர்கள் உட்பட 1146 ஆசிரியர்களுக்கு தற்போது பற்ருக்குறை நிலவுகின்றதாம்.

இந்நிலையில் கல்குடாத் தொகுதியிலுள்ள 62 பாடசாலைகளில் 20, 14, பட்டிருப்புத் தொகுதியிலுள்ள 71 பாடசாலைகளில் 18, 9, மட்டக்களப்பு தொகுதியிலுள்ள 114 பாடசாலைகளில் 12, 18 முறையே ஒரு ஆசிரியர், இரு ஆசிரியர் பாடசாலையாக மிகவும் பின்தங்கிய கிராமங்களில் கடந்த பல வருடங்களாக காணப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரிய பற்ருக்குறை தீர்க்கப்படுவதாயின் கணிதம்—25, ஆரம்பக்கல்வி —883, விஞ்ஞானம்-23, ஆங்கிலம்—150, அழகியற் கலை—16, மனையியல் 31 என்ற ரீதியில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுடன் உயிரியல்—6, பௌதீகம்—6, கணிதம்—3, வர்த்தகம்—3 என்ற ரீதியில் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பற்ருக்குறை நிலவுகின்றது.

## பொலிசார் நடவடிக்கை

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை, சுன்ஞகம் பொலிஸ் பகுதிகளில் வடிசாராய உற்பத்தியும், பாவனையும் அதிகரித்து வருவதனையடுத்து பொலிசார் தீவிர கண்காணிப்பு செலுத்தியுள்ளனர்.

தற்போது கள்கிடைப்பது மிகவும் குறைவாக இருப்பதால் அதற்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. அத்துடன் சாராயத்தின் விலையும் அதிகரித்து விட்டதால் மதுப்பிரியர்கள் வடிசாராயத்தையே நாடிவருவதாகக் கூறப்படுகிறது, இதனைத் தொடர்ந்து பொலிசார் உஷார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

வடமராட்சி, தென்மராட்சியில்

# இலவச கண் சிகிச்சைக்கு 'லயன்ஸ்' கழகம் ஏற்பாடு!

(புலோலி)

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி மக்களுக்கு விமோசனம் அளிக்குமுகமாக இலவச 'நடமாடும் கண் வைத்திய முகாம்', கண் வைத்திய சிகிச்சைகளை மேற்கொள்ள உள்ளது.

பருத்தித்துறை லயன்ஸ் கழகமும், சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து இந்நடமாடும் கண்வைத்திய முகாமை நடாத்துகின்றன.

அடுத்த மாதம் 24ந் திகதி முதல் 27ந் திகதி வரை 4 நாட்கள் இந்நடமாடும் கண் வைத்திய முகாம், பளை, கொடிகாமம், சாவகச்சேரி, தாழையடி, நாகர்கோவில், நெல்லியடி, தொண்டமானுறு. வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலுள்ள கண் நோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் திருமதி இந்திரா சிவயோகம் தலைமையிலான கண்வைத்திய நிபுணர் குழு ஒன்று இந்நடமாடும் கண் வைத்திய முகாமில் சிகிச்சை அளிக்கும்.

இவ்வைத்திய முகாமில், கண் சத்திர சிகிச்சைசெய்யப் படவேண்டிய கண் நோயாளர்கள். மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு அங்கே சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும். பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும்பெருமாள் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்ருர். (க)

## கோரிக்கை

(மண்டைதீவு)

மண்டைதீவு மாகாவித்தியாலய அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டத்தை கூட்டுமாறும் மேற்படி சபை இயங்குவதற்கும் புதிய நிர்வாகத்தை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவர் திரு. எஸ். பாலசிங்கம் வடமாநில கல்விப்பணிப்பாளரை கேட்டுள்ளார்.

மேற்படி சபையின் செயலாளர் கடந்த ஆறுமாதமாக வெளிநாடு சென்றுள்ளதால் பாடசாலை அபிவிருத்தி வேலைகள் மந்தநிலையை அடைந்துள்ளதாலும் மேற்படி சபையை கூட்டுமாறு இப்புகாரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடும்மீன் வெற்றி

(வவனியா)

யாழ். பாடும்மீன் விளையாட்டுக்கழகத்துக்கும், வவனியா ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும்இடையிலான சிநேகபூர்வமான உதைபந்தாட்டம் வவனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது.

பாடும்மீன் விளையாட்டு கழகம் 3—0 கோல்களால் வெற்றியீட்டியது. மத்தியஸ்தராக திரு. வி. சொர்ணலிங்கம் கடமை புரிந்தார்.

## சேவைநலம் பாராட்டு

(சாவகச்சேரி)

'இப்பாடசாலையில் இவர் கற்பிக்கும் காலத்தில் தனது கடமைகளைத் திறம்படச்செய்து ஒரு நல்லாசிரியஞகத் திகழ்ந்தார். இவரது மாற்றம் எமது பாடசாலைக்குப் பேரிழப்பாகும்.'

வரணி வடக்குச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பயிற்சிநெறிக்குச் செல்லும் ஆசிரியர் க. சின்னத்துரையின் பிரிவுபசார வைபவத்திற்குத் தலைமைதாங்கிய அதிபர் சி. பொன்னையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆசிரியர்களும் இவரது சேவையைப் பாராட்டிப் பேசினர்.

# போதைப் பொருளுக்குப் பலியாகும் இளையதலைமுறை

## மரணவிசாரணை அதிகாரி கவலை

(வவனியா)

''இளம் சந்ததியினர் போதைப் பொருள்களைப் பாவிப்பதனல் தமது வாழ்வைக் குறைத்துக்கொள்கிருர்கள். கஞ்சா போன்றபோதைப் பொருள்களை விற்பனைசெய்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிப்பதின்மூலம் இளம் சந்ததியினரை நல்வழிப்படுத்த வேண்டும்.''

இவ்வாறு 24 வயது இளைஞர் ஒருவரின் மரணம்தொடர்பாக விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கே. பாலசிங்கம் குறிப்பிட்டார்.

வவனியா—சாஸ்திரி கூழாங்குளம் என்ற இடத்தைச் சேர்ந்த பாஸ்கரன் தியாகராசா (24 வயது என்ற இளைஞனுக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதாகவும் இவரை ஆஸ்பத்திரியில் அனுமதிப்பதற்காக கிராமத்திலிருந்து நகருக்கு கொண்டுவரும் வழியில் இடைநடுவில் மரணமானுர் எனவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கஞ்சா போன்ற போதை வஸ்துக்கள் பாவித்ததினுல் சுவாசப்பை தாக்கப்பட்டதும் மன்றி இருதயம் பலவீனம் அடைந்திருந்ததாக பிரேத பரிசோதனை நடாத்திய வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி சோ. நிரஞ்சன் தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.

மரணமானவரின் நண்பர் கறுப்பையா நாகராசா என்பவர் சாட்சியமளிக்கையில் ''காலமானவர் அடிக்கடி கஞ்சா குடிப்பது வழக்கம் என்றும், அத்துடன் போதை ஏறியவுடன் போத்தல் துண்டுகள், கல் போன்ற பொருள்களினுல் தனது உடலை கீறி காயம் ஏற்படுத்துவதும், வாயில் போட்டு உண்பதும் வழக்கம் எனவும் தெரிவித்தார்.

விசாரணையின்பின் மாரடைப்பினுல் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

## மகளிர் விடுதியை உடைத்துக் கொள்ளை

(வவனியா)

இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியால விடுதி உடைக்கப்பட்டு 13000 ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக வவனியா பொலிசாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலீசார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பட்டம் விட்டசிறுவன் கிணற்றுக்குப் பலி!

(பச்சிலைப்பள்ளி)

நூலில் பட்டம் விட்ட சிறுவன் பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் தவறி விழுந்து மரணமானுர். இச் சம்பவம் பளைப் பகுதியிலுள்ள ஆழியவளை என்னுமிடத்தில் நடைபெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இரத்தினசிங்கம் பாலமனேகரன் என்ற சிறுவனே கிணற்றுக்குள் விழுந்து மரணமானவராவார்:

இச் சிறுவன் நூலில் பட்டம் விட்டுக்கொண்டு பின்பக்கமாக ஓடும்போது, வழியில் கிடந்த பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் விழுந்து மரணமானுர்

மரணவிசாரணை நடத்திய செம்பியன்பற்றுப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். இராசையா விபத்திஞல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## போலந்து...

(3 ம் பக்கத்தொடர்ச்சி)

அது கோருகிறது. இந்த முறையில் கிழக்கு ஐரோப்பாவுக்கும், மேற்கு ஐரோப்பாவுக்கும் இடையேயான ஒத்துழைப்பின் சகல துறைகளையும் அது தகர்க்க விரும்புகிறது'' என்று ''பிராவ்தா'' எழுதியுள்ளது.

7 வது-மகளிர் வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9. 0
பட்டாக்கத்தி பைரவன்

ராஜா (யாழ். நகர்)
சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
ரஜனிகாந்த், படாபட், தேங்காய் சீனிவாசன்
6 இருந்து 60 வரை
(புதிய பிரதி)

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:30, 6:15, 9:30
யாழ். நகர்
கமலஹாசன் ஸ்ரீதேவி (இருவேடம்) நடித்த
கல்யாண ராமன்
(புதிய பிரதி)

இன்னும் சிலதினங்கள் மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி10—30,2—30,6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

ராணி (யாழ்.நகர்) கடைசி 2 தினங்கள்
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
சிவாஜி லட்சுமி
தங்கைக்காக
29 முதல் உல்லாசப்பறவைகள்

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
131 வது வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி
குரு
பரபரப்பூட்டி காட்சியளிக்கும் கடைசி வாரம்!

Regal Cinema தினசரி 10—30,2—00,
(Jaffna) Tele. 360. 4—30, 7—00, 9—30
THE MAGNIFICENT SEVEN
DEADLY SINS
(Color-Comedy)
28—29
FAME
(Adults only Color)

# இன்றைய பலன்

தை மாதம் 14 ம் திகதி
புதன்கிழமை
(27—1—82)

மேடம்: குடும்பத்தில் சுகக் குறைவுகள் தென்படலாம். அதிக அலைச்சலின்மூலம் கவலைகள் உருவாகும். முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை போடுவதற்கு முயற்சிகள் நடைபெறும். உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

இடபம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும். சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடுசெய்யும் சாத்தியம் ஏற்படலாம்.

மிதுனம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும், புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும், நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கும் இடம் உண்டு. பிள்ளை ஒன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும்.

கடகம்: எதிலும் அவசரக் கோலம் தென்படும். சகோதர வழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு. எதிர்பார்த்த வரவுகளும் தடைபடக்கூடும் இளமை நினைவுகள் வேதனையைத் தரும், மனத்திடம் மருந்தாகும்.

சிங்கம்: திடீர் வரவுகளுக்கு இடமுண்டு. வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும். பேச்சுவன்மையின் மூலம் பெரிய இடத்து ஆதரவை தேடிக்கொள்வீர்கள், குடும்பத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் உண்டு.

கன்னி: அதிக அவசரம் உங்களுக்கு எரிச்சலைத் தரலாம். தொழில்துறையில் வருமானம் மிகவும் மட்டமாகவே இருக்கும். நண்பர்களின்ஆசை வார்த்தைகளில் மயங்கவேண்டாம். சுமாரான தினம்.

துலாம்: வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை. இனபந்துக்களின் ஆதரவும் கிடைக்கும், எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும்.

விருட்சிகம்: தொழில்துறையில் புதிய வெற்றிகளுக்கு வாய்ப்புண்டு. வெளியிடத்து தொடர்புகள் மூலம் ஆதரவு அதிகரிக்கும். வணிகர்களாயின் வர்த்தகம் சம்பந்தமாக வெளிநாடு செல்லும் சந்தர்ப்பமும் ஏற்படமுடியும்.

தனு: பொருள் ஈட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள், எதையும் சிறப்பாக சாதிப்பதில் முதல் இடத்தைப் பெறுவீர்கள். மக்களால்மகிழ்ச்சிக்கிடமுண்டு. உத்தியோக உயர்வு கிடைக்கும்.

மகரம்: துன்பத்தின் ரேகைகள் படரும், எதிலும் தயக்கம் ஏற்படும். ஆதரவு கொடுத்தவர் முடிவில் கையை விரிக்கக்கூடும். கடன் தொல்லை அதிகரிக்கலாம். நிதானம் வேண்டும்.

கும்பம்: முன்னேற்றம் தடைப்படும். குறுக்குவழி தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம். எதேச்சாதிகாரப்போக்கால் சிலரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். மன அடக்கம் நன்று.

மீனம்: பேச்சுவன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள். கல்வித்துறையில் திருப்திகரமான முன்னேற்றமுண்டு. சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலாம். சிறப்பான தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# இடமாற்றம்

(துணுக்காய்)

துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ. சங்கத்தின் கணக்காளராகக் கடந்த 4 வருடங்களாகக் கடமைபுரிந்த திரு. இ. ஜெயரட்ணசிங்கம் கூட்டுறவுப் பயிற்சி பெறுவதற்காக யாழ். கூட்டுறவுக் கல்லூரிக்குச் சென்றுள்ளார்.

### சுகாதார திணைக்கள ஊழியருக்கு

# சம்பள முற்பணமாக 300 ரூபா!

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு விசேட சம்பள முற்பணமாக 300 ரூபா எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் வழங்குவதற்கு யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது,

மாதச்சம்பளமாக 520 ரூபாவுக்கு குறைவாக பெறும் ஊழியர்களுக்கே இந்த விசேடசம்பள முற்பணம் வழங்கப்படவுள்ளது. இந்த விசேடசம்பள முற்பணத்தைப்பெறவிரும்பும் சுகாதார திணைக்கள ஊழியர்கள் அடுத்தமாதம் 10ம் திகதிக்கு முன்னர் தமதுவிண்ணப்பங்களை யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# சவர்க்கார விலை சரிகிறது

(கொழும்பு)

சவர்க்காரம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் 'கோஸ்டிக்சோடா'வின் விலை குறைக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து சவர்க்காரங்களின் விலை சுமார் 8 சத வீதத்தால் குறையுமெனக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திரு. ஜஸ்டின் டயஸ் அறிவித்துள்ளார்.

திரு. டயஸ், 'கோஸ்டிக் சோடா' விலை குறைப்புப் பற்றித் தெரிவிக்கையில், ஒரு தொன்னின் விலை 12,350 ரூபாவிலிருந்து 11,000 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருப்பதாகவும், திரவச் சோடா 10,350 ரூபாவிலிருந்து 8,990 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினுர்,

அடுத்த வாரம் புதிய விலைகள் பற்றிச் சகல உற்பத்தியாளர்களுக்கும் அறிவிக்கும் வகையிம் கூட்டமொன்றைக் கூட்டவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (கி)

# பொலிஸ் இன்ஸ்பெக்டர்மீது கொலைக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸ் பாதுகாப்பில் இருந்த எஸ். சுப்பிரமணியம் என்பவரது மரணம் தொடர்பாக உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பிரியங்கா பெரேரா மீது கொலைக் குற்றஞ்சாட்டி கிரான்ட்பாஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

எஸ். சுப்பிரமணியம் பொலிஸ் பாதுகாப்பிலிருக்கும் போது தாக்குதலுக்குள்ளாகி மரணமானுரென்று குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டது.

கிரான்டபாஸ் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. எட்வர்ட் விதாரன மேற்படி வழக்கை கொழும்பு மேலதிக நீதவான் திரு. சந்ரதாச நாணயக்கார முன்னிலையில் தாக்கல்செய்தார்,

நீதவான் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை வழக்கை ஒத்திவைத்துள்ளார். (கி)

# தபால் அதிபர் இடமாற்றம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பிரதம தபால் அதிபராகக் கடமையாற்றிய பி. ஸ்ரீரங்கராசா அனுராதபுர தபால் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

உதவித்தபால் அதிபர் சி. ஜெயசேகரம் மூதூர் தபால் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். திரு. கே. ஆனந்தக் கிருஷ்ணன் சுன்ஞகம் தபால் நிலையத்திலிருந்து கொடிகாமத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

# வருடாந்த உற்சவம்

(சாவகச்சேரி)

தவசிகுளம் புனித காணிக்கை மாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 24ந் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இத்திருவிழாவுக்கான நவதின வழிபாடுகள் தினமும் மாலையில் நடைபெற்றுவருகின்றன.

பெப்ரவரி 1ந் திகதி இரவு விசேட ஆராதனைகளும், நற்கருணைப் பவனியும், திருப்பலிப் பூசையும் இடம்பெறும். 2ந் திகதி காலை திருவிழாத்திருப்பலிப்பூசை இடம்பெறும். பூசையின்போது சிறுவர்களுக்கு முதல் நன்மை வழங்கப்படவுள்ளது. பூசை முடிவில் திருச்சொரூப பவனி இடம்பெறும். ஆராதனைகளை மிருசுவில் பங்குக் கட்டளைக் குரவர் வண. பிதா ஜே. எஸ். பிரான்சிஸ் அடிகளார் நடத்துவார். (க)

# தண்ணீர் விநியோகம்

(துணுக்காய்)

வவனிக்குளம் பாரிய நீர்ப்பாசனத்திட்டத்தின்கீழ் தண்ணீர் பெறும் துணுக்காய், பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களுக்கு எதிர்வரும் சிறுபோக தண்ணீர் விநியோகம் சம்பந்தமான கூட்டம் மல்லாவி அ. த. க. பாடசாலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. ஞானச்சந்திரன், மேலதிக அரசாங்க அதிபர் திரு. சி. பற்றிக், தலைமையக அரசாங்க அதிபர் திரு. கு. தேவசிகாமணி, வவனிக்குளம், நீர்ப்பாசன பொறியியலாளர், உயர் அதிகாரிகள், விவசாய குடியேற்ற மக்கள் கலந்து கொண்டனர்,

வியசாயிகளின் பலதரப்பட்ட பிரச்னைகள் எடுத்து ஆராயப்பட்டதுடன் எதிர்வரும் சிறுபோகத்துக்கு வலதுகரை வாய்க்கால்கள் திருத்தம் செய்யவேண்டியிருப்பதால் இடதுகரைப் பகுதியில் சகல விவசாயிகளும் சிறுபோக வேளான்மையைமேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

16 பரப்பு நெற்காணி மானிப்பாய் தபாற் கந்தோர் ரோட்டருகில், நிரப்பி வீடு கட்டமுடியும் விபரங்களுக்கு: செ. குமார சுவாமி, பொம்பே கவுஸ், கே. கே. எஸ். வீதி, காலிங்கன் தியேட்டர் அருகே இணுவில். 2067

33 ஸ்ரீ 3000 தொடர்பிலக்க ஒஸ்டீன் சேம்பிறிஷ் வான், ஹொன்டா C 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. நா. சாம்பசிவம், அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், (2039)

பலாலி விமானநிலையத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் தம்பாலை வீதியில் 100 பரப்பு காணி கல்வீட்டுடன் விற்பனைக்குண்டு, இரண்டு துண்டுகளாக விற்கப்படும், செம்மண் தறை, சுற்றுமதில், ஆழமான இரு கிணறுகள், பயன்தரக் கூடிய மரங்கள் உண்டு, இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு காற்றுடி இயந்திரங்களும் 5000 கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய தண்ணீர் தாங்கிகளும் உண்டு, மேலதிக விபரங்களுக்கு: 399, பிரதான வீதி, சுண்டிக்குளி. (2076)

சாவகச்சேரிச் சந்தையிலிருந்து 300 யார் தூரத்திற்குள் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திரு. வை. விஜயபாஸ்கரன், நகரசபை அலுவலகம், சாவகச்சேரி. தொலைபேசி: 276 — சாவகச்சேரி. [2075]

4 சிலிண்டர் 30 K.V டீசல் Catterpillar மின்சார ஜெனரேற்றர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொழிற்சாலைக்கும் மற்றும் பாவனைக்கும் மிகவும் உகந்தது. விரும்புவோர் 2—2—82க்கு முன் L. Y. I. பேசாலைக்கு நேரில் வரவும். 2090

சண்டிலிப்பாய் — சங்கானை ரோட்டில் 7ம் கட்டையில் உள்ள ஐயனார் வீதியில் வீடு கட்டுவதற்கு ஏற்ற ஐந்து, பத்து அல்லது இருபது பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு 112, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொலைபேசி; 7200, 2094

ஏழு அறை கொண்ட கட்டிடம் 14 கதவு, 14 யன்னல், பலகை, ஓட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க; S. S. பொன்னுத்துரை, 47, சினிவாசகம் ரோட், கொட்டடி, யாழ்ப்பாணம். 2998

## வகுப்பு

எயர் கொண்டிசனிங் அன் ரெப்பிறிஜிறேசன் செய்முறைப் பயிற்சிகளுடன் 1-2 82இல் வகுப்புகள் ஆரம்பம். Auto Cool Engineers (சாந்தி சினிமா முன்பாக) கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம். (2026)

## தேவை

நல்லூரில் இருக்கும் எமது வாசனைத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. வேலை செய்ய ஆர்வமுள்ள, தேக ஆரோக்கியமுள்ள, நல்லொழுக்கமுள்ள பெண்பிள்ளைகள் மட்டும் நேரில் வரவும். நல்லூருக்குச் சமீபமாக வசிப்பவர்கள் விரும்பப்படுவர். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 191, (53), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2096

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் தகுதியுடைய ஆசிரியை உடன் தேவை. தங்குமிட வசதியும், தகுந்த சம்பளமும் வழங்கப்படும். விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: திரு. அருள்சீலன் பெர்ணண்டோ, பிரதான வீதி, பேசாலை. 2101

## தவறிவிட்டது

கொடிகாமம் சாவகச்சேரி புகையிரத நிலையத்திற்கிடையில் 25ம் திகதி காலை தபால் புகையிரதத்தில் அடையாள அட்டை, றேடியோ லைசன்ஸ், மற்றும் முக்கிய பத்திரங்களுடன் சிவப்புநிற பிரயாணப்பை தவறிவிட்டது. கண்டெடுப்பவர் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். செ. கோகழிநாதன், சுப்பிரமணியம் வளவு, உரும்பராய் வடக்கு. 2095

## சேவை

யாழ். வளாக புதிய மருத்துவ பீடத்திற்கு அண்மையில் சகல வசதிகளுங்கொண்ட வீட்டில் பத்து மாணவிகளுக்கு உணவும் தங்குமிடவசதியும் கொடுக்கப்படும். விண்ணப்பிக்க. விளம்பர இல. 2099, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2099

## கல்வி

பிரஞ்சு மொழி, ஜேர்மன் மொழி வகுப்புக்கள் இலகுவான முறையில் போதனை, குறுகிய காலப் பயிற்சி—அனைவரும் சேரலாம். ஆரம்பம்: 29—01—82 நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2046

## பயிற்சி

கம்பியூட்டர் புறொகிராமிங் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. எங்கள் நிறுவனத்திலுள்ள கம்பியூட்டர் இயந்திரத்தில் செய்கை முறைப் பயிற்சிகளும் (செய்முறை பயிற்சி) அளிக்கப்படுகின்றன. இருபாலாரும் கற்கலாம். புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 23-01-82. விபரங்களுக்கு: Auto Cool Engineers (சாந்தி தியேட்டருக்கு முன்பாக) கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம். (2028)

**Patrician Industrial Institute**
59, ST. PATRICK'S ROAD, JAFFNA.
**புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 6-02-82**
★ MOTOR MECHANISM
★ ELECTRICAL WIRING
★ WELDING
(செய்முறை, அறிமுறை, பயிற்சி உட்பட)
குறிப்பிட்ட தொகை மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.
தொடர்பு கொள்ளவும்:
(2025) பதிவாளர்.

மானிப்பாய் பிரிவில்

# விசர் நோய் தடுப்பு ஊசி ஏற்றும் நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நாய்களுக்கு விசர்நோய் வராது தடுப்பு ஊசி போடும் இயக்கம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டுவருகின்றது.

கடந்த ஒரு வார காலமாக மானிப்பாய்ப் பட்டினப் பிரதேசத்திலும், ஆனைக்கோட்டை சுகாதார பரிசோதகர் பிரிவிலும் பல நூற்றுக் கணக்கான நாய்களுக்குச் சுமார் 15 நிலையங்களில் வைத்து விசர் நோய்த் தடுப்பு ஊசிமருந்துகள் போடப்பட்டன.

பொதுமக்கள் தங்களது வீட்டு நாய்களைப் பெருமளவில் கொண்டுவந்து தங்களுக்குச் சமீபத்திலுள்ள நிலையங்களில் தடுப்பு ஊசிபோடுவித்துக்கொண்டுசென்றனர்.

மானிப்பாய் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஜி. சுந்தரலிங்கம், மானிப்பாய்ப் பட்டின பொது சுகாதார பரிசோதகர் திரு. டி. தம்புசாமி, ஆனைக்கோட்டை பொதுசுகாதார பரிசோதகர் திரு. ஏ. இராசவிரோதயம் ஆகியோர் இதற்கான ஒழுங்குகளைச்செய்திருந்தனர். (க)

# சாம்பியன்

(புலோலி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடாத்திய உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கோஷ்டி சாம்பியனாகியது.

இவ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இறுதிப்போட்டியில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கோஷ்டியும், கிளிநொச்சி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. இவ் இறுதிப்போட்டியில் 3 - 1 கோல்களால் மல்லாகம் கோஷ்டி வெற்றி ஈட்டி சாம்பியன் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது,

கிளிநொச்சி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. அன்ரன் சிறந்த விளையாட்டு வீரராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

# சுதந்திரதின விழா
## நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

இலங்கையின் சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ம் திகதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு அன்றையதினம் சிரமதானம், மரம்நாட்டு இயக்கம், ஆஸ்பத்திரிகளில் இரத்ததானம் வழங்கல், ஆலயங்களில் விசேட பூசைகள் என்பன போன்ற நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடாத்துமாறு கிராம அபிவிருத்திச்சங்கங்களைகிராம அபிவிருத்திஅமைச்சு கேட்டுள்ளது.

இதுதொடர்பாக கடந்த வாரம் மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகாரிகளுக்கு கிராம அபிவிருத்தி அமைச்சு சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

தொகுதி எம். பி.க்கள் உள்ளூர் திணைக்களத் தலைவர்கள் ஆகியோரின் அனுசரணையுடன் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மேற்படி சிரமதான வைபவங்களையும் மற்றும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்துகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ் சென்ற யாழ்ப்பாணம் அரியாலை 140, கண்டி வீதியைச் சேர்ந்த கனகரத்தினம் பெண் புவனேஸ்வரி என்பவரின் மரணசாதன மில்லாச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.
கந்தையா கனகரத்தினம், இல. 140, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம், மனுதார்.

மரணசாதன ]
நியாயாதிக்கம் ] இல. த/ 3575.

எதிராக

1. கனகரத்தினம் செல்வராசா தற்பொழுது இங்கிலாந்து.
2. கனகரத்தினம் மகள் இந்திராணி,
3. கனகரத்தினம் மகள் யோகராணி,
4. கனகரத்தினம் தவராஜா,
5. கனகரத்தினம் மகள் நீலராணி,
6, கனகரத்தினம் குகராஜா எல்லோரும் இல. 140, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். பராயமற்ற 6ம் எதிர்வாதியின் பாதுகாவலர் 4ம் எதிர்வாதி.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1982ம் ஆண்டு தை மாதம் 29ம் நாளன்று முற்பகல் 9—30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
தா. குலஞானம்
பதிவாளர்

1980ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ந் திகதியாக இன்று தேதியிடப்பட்டது.

2097

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணமெய்திய தெல்லிப்பழையைச் சேர்ந்த கந்தையா திருச்சிற்றம்பலம் பெண் சரஸ்வதி.

மரணமெய்தியவர்
கந்தையா திருச்சிற்றம்பலம், ''விமோசனபதி'', மல்லாகம்.

மனுதாரர்

மரணச்சொத்து)
நியாயாதிக்கம் ) இல. 101.

எதிர்

1. திருச்சிற்றம்பலம் மகள் மைதிலி,
2. வேலுப்பிள்ளை சுந்தரம் கைம்பெண் செல்லாச்சி, இருவரும் கம்பனை, தெல்லிப்பழை. 1ம் எதிர்வாதி பராயமடையாதவராகையால் அவரின் உத்தேச வழக்குக் காவலன் 2ம் எதிர்வாதி மூலம் வெளிப்படுகின்றார்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின்/ மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ஆம் ஆண்டு தை மாதம் 28ஆந் நாளன்று முற்பகல் 9—30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிசகட்டளை ஏன்முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குத் தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
(ஒப்பம்)
சு. வ. கணேசன்,
பதிவாளர்.

1981ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 28ஆம் நாள்.

2092

# திருட்டு

(சுழிபுரம்)

சுழிபுரம் பறுளாய் ஈஸ்வர விநாயகர் கோவிலில் இரவு நேரத்தில் கள்வர்கள் புகுந்து மூலஸ்தானத்தில் அமர்ந்திருக்கும் விநாயகர் விக்கிரகத்தை புரட்டி யந்திர தங்கத்தகட்டை எடுத்து தூரவீசிவிட்டுச் சென்றுள்ளனர்.

## தமிழ்நாட்டுக்...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்த்த வரவழைத்தான் எனக் கூறப்படுவதிலிருந்து அவனது காலத்திலேயே கோயில்களில் ஆடலும் பாடலும் உயரிய நிலையிலிருந்ததென்பதை அறிந்துகொள்ளலாம். திருமுறைகளைப் பண்ணோடு ஓதுவதற்கு நாற்பத்தெட்டு ஓதுவார்களை இராஜராஜன் தஞ்சைப் பெருங் கோயிலுக்கு நியமித்தான். கோயிலில் பாட்டுப்பாடுவதற்கும் பாணர்களும் அமர்த்தப்பட்டிருந்தனர். தேவரடியார்கள் பாடிய பாடல்களில் அந மார்க்கம் என்பது ஒருவகையாகும். அதைப்பாடுவதற்கு மிகச் சிறந்த பயிற்சியு புலமையும் தேவை. சத்துவம் இராசதம் தாமதம் என்ற முக்குணம்பற்றி வரும் மெய்க்கூத்து வகைகளில் அகமார்க்கம் ஒன்றாகும், என அடியார்க்கு நல்லார் கூறுவர், திருவொற்றியூரில் திருவாதிரை விழாவின் போது திருவெம்பாவை ஓதப்பட்டுவந்தது. இருபத்திரண்டு பதியிலார் நடனம் ஆடினர் ஒருவன் நட்டுவாங்கம் செய்தான். பதினாறு தேவரடியார்கள் தேவாரப் பதிகங்களை அகமார்க்க முறையில் பாடினார்கள் என்று அறிய முடிகிறது. இக்காலப் பகுதியில் கோயில்களிலும் மடங்களிலும் வேதங்கள் ஓதப்பட்டன. அவற்றை வீணையுடன் அத்தியயனஞ் செய்து வந்தார்கள். இவ் வழக்கம் இப்போது அருகிவிட்டது.

இவ்வாறு தமிழகத்தில் பல்லவர்காலத்திலிருந்து சிறப்பாக கோயில்களில் இசைக்கலை இடம்பெற்றது' இக்கலை நன்கு வளர்ச்சியடைந்தமையை சோழர் காலப்பகுதியில் கண்டு கொள்ள முடிகிறது. அதைத் தொடர்ந்து வந்த காலப்பகுதிகளிலும் இக் கலையானது கோயில்களில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. தற்காலத்திலும் கோயில்கள் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணுவனவாயமைந்துள்ளதுடன் இசைக்கலைவளர்ச்சிக்கும் தாயகமாக அமைந்துள்ளன என்றே கூற வேண்டும்.

# "டாக்ஸியில் எதிரிகளுடன் இறந்த பிரேமனும் ஏறினர்"

## கொலை வழக்கில் சாரதி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''எனது டாக்ஸியில் ஆரிய குளம் சந்தியில் எதிரிகளும் இறந்த பிரேமனும் ஏறினர்கள். கடையில் என்னசெய்தாய்? என்று 3ம் எதிரி விஜயன், இறந்தவரான பிரேமனிடம் கேட்டார். அதற்கு பிரேமன் தான் ஒன்றும் செய்யவில்லை என்று கூறினர். தமிழ்ப்பண்ணையடியில் எனது டாக்சியில் இருந்து எல்லோரும் இறங்கி விட்டார்கள். நான் எனது கடைக்குச் சென்றுவிட்டேன்''

யாழ் பிரேமன் கொலை வழக்கில் நேற்று சாட்சியமளித்த டாக்ஸி சாரதியான எஸ். ஜெயபாலன் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு நேற்றுக் காலை யாழ் நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் 81ம் ஆண்டு நவம்பர் 1ம் திகதி நடேசு யோகராசா அல்லது 'போயா', வேலுப்பிள்ளை கந்தசாமி அல்லது வெள்ளையன், சுப்பிரமணியம் விஜயராசா அல்லது விஜயன் ஆகியோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரேமன் என்பவரை கொலைசெய்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜரானர். வழக்காளி சார்பில் பொலிசாரின் உதவியுடன் சட்டத்தரணி வி. நடராசா ஆஜரானர்.

எஸ். ஜெயபாலன் சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது: ''சம்பவதினம் ஆரியகுளம் சந்தியில் எனது டாக்சியில் எதிரிகளும், பிரேமனும் ஏறினர்கள். 1ம், 3ம் எதிரிகளின் பெயர் எனக்குத் தெரியும். 1ம் எதிரியின் பெயர் போயா. 3ம் எதிரியின் பெயர் விஜயன். மற்றவர்களையும் தெரியும். ஆனல் அவர்களின் பெயர் தெரியாது.

''டாக்ஸி ஸ்ரான்லி வீதி வழியாக காங்கேசன்துறை வீதிக்குச் சென்றது. டாக்சி பிடித்தவர்களில் 2ம் எதிரியும் ஒருவர். டாக்சி தமிழ்ப் பண்ணைக்கு அருகில் வந்ததும் டாக்சியை நிறுத்தச்சொன்னர்கள். எல்லாரும் சேர்ந்து சொன்னர்கள். பின்னலிருந்து சொன்னர்கள். யார் சொன்னதென்பதை அவதானிக்கவில்லை.

''டாக்ஸி நின்றதும் எல்லோரும் இறங்கினர்கள். எனக்கு 3வது எதிரி வாடகைப்பணம் 5 ரூபா தந்தார். நான் ஏழு ரூபா கேட்டேன். அவர் 5 ரூபா தந்தார். அதன் பின் அவர்கள் போய்விட்டார்கள். நானும் போய்விட்டேன். 'ஈழநாடு'க்குப்பக்கத்திலுள்ள என் கடைக்குச் சென்றுவிட்டேன்.

''டாக்ஸியில் ஏறும் போது இறந்தவர் நீல சேட் அணிந்திருந்தார். இறங்கிப் போன போது பிரேமனுக்கு என்ன நடந்ததென்று தெரியாது. பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்தேன்.''

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: 1ம் எதிரி டாக்ஸியில் இறந்தவருடன் கதைக்கவில்லை?—நான்கவனிக்கவில்லை.

சட்: 3ம் எதிரி கதைத்ததைக் கவனித்தீர்?— 3ம் எதிரி முன்சீற்றில் இருந்து பின்னல் திரும்பிக் கதைத்தார். அப்போது கவனித்தேன். 1ம்எதிரி பின்னுக்கு இருந்ததால் கவனிக்க வில்லை.

சட்: ஆரியகுளச் சந்தியிலிருந்து தமிழ் பண்ணைக்குப் போக எவ்வளவு நிமிடம் பிடித்தது?— சுமார் மூன்று நிமிடம்.

சட்; அந்த மூன்று நிமிடத்தில் 3ம் எதிரி இறந்தவருடன் கதைத்தது இவ்வளவு தான்?—ஆம்.

சட்: அவர் கோபதாபமாகக் கதைக்கவில்லை?— இல்லை.

சட்: மற்ற எதிரிகளும் இறந்தவருடன் கோபதாபமாகக் கதைக்கவில்லை?— இல்லை,

சட்;டாக்ஸியிலிருந்து இறங்கி எங்குபோனர்கள்?— இறங்கி முன்பக்கமாகப் போனர்கள்.

சட்: 1ம் எதிரி இறந்தவருடன் டாக்ஸிக்குள் கதைவளிப்பட்டிருந்தால் அது உமக்குக் கேட்டிருக்கும்?—ஆம்.

சட்: அவர்கள் சாதாரணப் பயணிகள் போலவே இருந்தனர்?—ஆம்.

சட்: இறங்கிப்போகும் போதும் வித்தியாசமாகத் தோன்றவில்லை?— இல்லை.

சட்: அவர்கள் பார்த்த போது சில நண்பர்கள் ஒன்றுகக்கூடிச்சென்றதுபோல் இருந்தது?—ஆம்.

சட்: ஆரியகுளச் சந்திக்கு இடதுபக்கம். 'குட்சேட் பகுதியிருக்கிறது?—ஆம்.

சட்: டாக்ஸியில் அந்தப் பக்கம் போகவில்லை?— இல்லை.

சட்: எதற்காக புகையிரத நிலையத்திற்கு முதலில் போனீர்?— கொழும்பிலிருந்து வரும் நண்பகல் 1—20 யாழ்தேவிக்கு ஆட்களைப் பார்க்கப் போனேன்.

சட்: பின் எங்குசென்றீர்?— பலாலி வீதிவழியாக எனது கடைக்குச் சென்றுகொண்டிருந்தேன்,

சட்: ஆரியகுளம் சந்திதெரியும்?—ஆம்.

சட்: சரியாக எவ்விடத்தில் டாக்ஸியை மறித்தீர்கள்?— பலாலிவீதி, ஸ்ரான்லிவீதி சந்திக்கருகில்,

சட்: எத்தனை பேர் மறித்தார்கள்?— ஐந்து ஆறு போ மறித்தார்கள்.

சட்: டாக்ஸி மறித்தது பௌத்த விகாரைக்கு முன்பாகவா?—ஆம்.

சட்: டாக்ஸியில் நேராக கே. கே.எஸ்.வீதிக்கு போனர்கள்?—ஆம்

சட்: வேறு ஒரு இடமும் போகவில்லை?— இல்லை.

சட்: ஒரு இடமும் வழியில் நிறுத்தவில்லை?— இல்லை.

சட்; இறந்தவர் சேட் அணிந்திருந்தது நிச்சயமாகத் தெரியும்?— ஆம்,

சட்: சேட்டைக் கழற்றி மாற்றியதைக் காணவில்லை?— இல்லை.

சட்: டாக்சியில் ஏறியது முதல் இறங்கும்வரை வழியில் வேறுயாரும் ஏறவுமில்லை? —இல்லை.

சட்: இறங்கவுமில்லை?— இல்லை.

விசாரணை இன்று காலை 9 மணிவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

### ஒத்திவைக்கப்பட்ட சிறை

(யாழ்ப்பாணம்)

வீடுடைத்துக் களவெடுத்த ஒருவருக்கு யாழ். நீதவான் ரி. ஜோகநாதன் 6 மாதம் 5வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்தார்.

அரியாலை நெடுங்குளம் வீதியைச்சேர்ந்த செல்லையா பாலசுந்தரம் என்பவரின் வீட்டை வவுனியாவைச்சேர்ந்த முனியாண்டி கணேசன் என்பவர் உடைத்து 1500 ரூபா பெறுமதியான பொருள்களைக் களவெடுத்ததாக யாழ். பொலிசாரால், யாழ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரிக்கு நீதவான் மேற்குறிப்பிட்ட அபராதம் விதித்தார்.


ஹோம் பினன்ஸ் லிமிட்.

திறமைமிக்க டெலிவிஷன்

SANYO — T. V. BLACK AND WHITE

திரை 14'', 20''

திடகாத்திரமான

PHOENIX — CHINESE

சைக்கிள்கள் (HELMET-தொப்பிகள்)

'HOME MATE' வீட்டுப் பாவனைக்குகந்த

மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும்

மின் பம்புகள்

கட்டுப்பணமுறையிலும் பெறலாம்

ஹோம் பினன்ஸ் லிமிட்.

இல. 82, கன்னதிட்டி - யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 8310


## இப்படியும் நடக்கிறது

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கட்டாக்காலி நாய்களை 'காலி' செய்வதில் பிரகடனப் படுத்தப்பட்ட 'யுத்தம்' இப்பொழுது நடக்கிறது.

இந்த 'யுத்த'த்தில் மாவிட்டபுரத்தில், ஒருவரது வளர்ப்பு நாயும் சிக்கிக்கொள்ளவே, நாயின் சொந்தக்காரர் துடிதுடித்து ஓடோடிச் சென்ருர் மீட்பதற்கு!

ஆனல் நாய் கொல்லப்பட்டு, புதைக்கப்பட்டுவிட்டது!

அவர் அழுதார். வாசலில் கறுப்புக்கொடி தொங்கவிட்டார். வீதியால் சென்றவர்களிடம் எல்லாம் தனது துயரத்தைக் கூறி கண்ணீர் வடித்தார். இதுமட்டுமா? அன்று ஒருநாள் முழுவதும் அவர் உண்ணவிரதம்!

ஊடுருவி

## அபிவிருத்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. கே. துரைரத்தினம் தலைவராகவும், திரு. மு. தம்பிமுத்து செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர் இக் குழுவில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி சேர்த்துக்கொள்ளப்பட்ட போது அவர் அதனை ஏற்ற மறுத்துவிட்டார்.

இக்குழுவில் மற்றும் திரு. ராஜேந்திரன், திரு. சின்னத்துரை, திரு. கே. ராஜலிங்கம், திரு. ரி. திருநாவுக்கரசு, திரு. எம்.ஆலாலசுந்தரம் ஆகியோர் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளனர்.

''அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குவதற்கு, குறிப்பாகத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு உதவக்கூடிய வகையில், சில காலத்திற்கு முன் சாவகச்சேரிப்பகுதியில் நடாத்தப்பட்டதுபோன்ற சமூக பொருளாதார ஆய்வு ஒன்றை யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் வெகு விரைவில் நடத்தவேண்டும்'' என்று திரு. தம்பிமுத்துவினல் கொண்டுவரப்பட்ட மற்றொரு தீர்மானமும் சபையில் நிறைவேறியது.

இதற்குப்பொறுப்பாகயாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவும், உதவியாளர்களாக திரு. ராஜேந்திரன், திரு. மு. தம்பிமுத்து ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (க—அ)

## கைகலப்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொழிற்சாலைப் பகுதி மின்சாரம் இல்லாது இருளில் மூழ்கியந்தத் தொடர்ந்து இனம் தெரியாத சிலரினல் தொழிலாளர்கள் மோசமான முறையில் தாக்கப்பட்டு படுகாயம் அடைந்தனராம்.

இத்தாக்குதல் சிலமணி நேரம் வரை நீடித்ததாகக் கூறப்பட்டது.

## இப்படியும் ஒரு சபதம்!

(மண்டைதீவு)

நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணை தரையில் விழுத்தி அடித்ததுடன் அவரது கூந்தலை வெட்டினராம் குடும்பப்பெண் ஒருவர்.

மேற்படி சம்பவம் ஊர்காவற்றுறை தொகுதியிலுள்ள தனுவில் கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது. கர்ப்பிணிப் பெண்ணான மல்லிகா கூந்தல் வெட்டப்பட்ட நிலையில் ஊர்காவற்றுறை அரசினர்வைத்தியசாலையில் பிரசவத்துக்காக தற்பொழுது அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. சம்பவம்நடைபெற்ற தினம் தனது தோட்டத்தில் புல்லு வெட்டிக்கொண்டிருக்கையில் இவரது மைத்துனி திருமதி செல்வம் மகாலிங்கம் என்பவர் மேற்படி பெண்ணை தள்ளி விழுத்தி, அடித்து அவரது கூந்தலை கத்தரிக்கோலால் வெட்டி தனது சபதத்தைத் தீர்த்துக் கொண்டாராம்.

இச்சம்பவம் குறித்து ஊர்காவற்றுறைபொலிசில் முறைப்பாடு செய்ததைத்தொடர்ந்து பொலிசார் விசாரணை செய்ததோடு சம்பந்தப்பட்டவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு உதவித் தபால் அதிபர் திரு. அன்ரன் செல்வராசா இம் மாதம் தொடக்கம் பதவி உயர்வு பெற்று கொழும்பு பெரிய தபால் நிலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

திரு. அன்ரன் செல்வராசா, தபால் ஊழியராக கடந்த 30 வருடகாலம் சேவையாற்றி பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச்செல்லும் திரு. இ. பொன்னுந்துரை ஆகிய இருவருக்கும் மேற்படி தபால்நிலைய ஊழியர்கள் சார்பில் பிரிவு உபசார வைபவம் ஒன்று தபால் அதிபர் திரு. திரு. எஸ். சரவணமுத்து தலைமையில் நடாத்தப்பட்டது.

## மரண அறிவித்தல்

### சின்னையா அல்பேட் குணநாயகம்

சின்னையா அல்பேட் குணநாயகம் காலமானர். இவர், யாழ்ப்பாணக் கல்லூரியின் இளைப்பாறிய லிகிதரும், ஞானமலர் ஆசிரியையின் அன்புக் கணவரும், இரஞ்சினி, மனோரஞ்சன் (ஆசிரியர், மாங்குளம் மகாவித்தியாலயம்), சுகந்தினி (இங்கிலாந்து), விநோதினி (ஆசிரிய கலாசாலை, பலாலி), சுகந்தன் (யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் தந்தையும், ஜெயரத்தினம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), ஜோன் (இங்கிலாந்து), டொரொதி (மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனருமாவார்.

அன்னரின் அடக்க ஆராதனை இன்று புதன் கிழமை (27—01—82) பிற்பகல் 3.30 மணிக்கு ஏழாலை தெற்கு அன்னரது இல்லத்தில் நடைபெறும்.

2108

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஜனவரி மீ 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.